# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்
இலவச வெளியீடு

மலர் : 4 இதழ் : 7 அக்டோபர் 2025



# MOST TRUSTED CHIT FUND COMPANY AWARD

தமிழகத்தின் முன்னணி தொலைக்காட்சி News18 Tamil Nadu சார்பில் கடந்த 26.09.2025 அன்று மதுரையில் நடைபெற்ற தொழில் ஆளுமை விருதுகள் 2025 நிகழ்வில், நமது ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு மேலும் ஒரு மகுடமாக Most Trusted Chit Fund Company Award விருது வழங்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விருதினை மாண்புமிகு தமிழக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. P. மூர்த்தி அவர்கள் வழங்க, நமது நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. அரு. உமாபதி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.







எங்கள் நிறுவன 79 ஆண்டு காலப்பயணத்தில் தொடரும் அன்பான வாடிக்கையாளர்கள் மற்றும் உடன் பணிபுரியும் ஊழியர்களாலும் எங்களின் இந்த அங்கீகாரம் சாத்தியமானது. எங்களுடன் பயணிக்கும் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.


ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

ரூ.1,00,000/-
முதல்
ரூ.1,00,00,000/-
வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்

SREE VISALAM CHIT FUND LTD.
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

தீபங்களின் ஒளி வெள்ளத்தில் காரிருள் விலகி,
நல்விடியல் பிறக்கட்டும்.
அனைவரது இல்லங்களிலும் உள்ளங்களிலும்

## அன்பு, அமைதி, செல்வம்


நிலைத்து நீடித்திருக்கட்டும்.
தீப ஒளித் திருநாளைப் பாதுகாப்பாகக் கொண்டாடி மகிழ்வோம்.
அனைவருக்கும்

## இனிய தீப ஒளித் திருநாள் நல்வாழ்த்துகள்.





ஆசிரியர் குழு,
நாம் நகரத்தார் மின்னிதழ்.




GET IT ON Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக


நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...

இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்

உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

அக்டோபர் 2025

மலர் : 4  இதழ் : 7

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---



**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---



கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

LECTRIX

PM
PALLATHUR MOTORS LLP

நவம்பர்
1 முதல் 12 வரை

# தீபாவளி
## கொண்டாட்டம்

# 100%

நிதி உதவியுடன்

**BOOK BEFORE DIWALI TO AVAIL ATTRACTIVE OFFERS**




**3 நிமிடங்களில் கடன் ஒப்புதல்***
**குறைந்தபட்ச எக்ஸ்சேஞ்ச் 5000***

*நிபந்தனைக்கு உட்பட்டது

# பள்ளத்தூர் மோட்டர்ஸ்

எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி – 630 001

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
**+91 80157 73735**

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றி.

ஆன்மிகம், பண்பாடு, சிறுகதை, கவிதை, வாழ்வியல் உள்ளிட்ட பல சிறப்பான உள்ளடக்கங்களைத் தாங்கி எதிர் வரும் தீபத் திருநாளை ஒட்டி தீபாவளி சிறப்பிதழாக வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது.

எல்லா உயிர்களுக்கும் துன்பம் இழைத்துக் கொண்டிருந்த நரகாசுரனை இறைவன் வதம் செய்து அழித்த தினமே தீபாவளி. ஸ்ரீகிருஷ்ணர் அந்த அரக்கனை வதம் செய்தபோது உலகம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது. தீபங்கள் ஏற்றியும் புத்தாடைகள் புனைந்தும் மக்கள் தங்கள் ஆனந்தத்தை வெளிப்படுத்தினார்கள். இப்படித்தான் தீபாவளிக் கொண்டாட்டம் தொடங்கியது.

மகாவிஷ்ணு வாமனாவதாரம் எடுத்து மகாபலியின் ஆணவத்தை அழித்ததும், ஸ்ரீராமர் ராவணனை வதம் செய்து பின் தான் பட்டாபிஷேகம் செய்துகொண்டதும் இதே நாளில்தான் என்று நம் புராணங்கள் பேசுகின்றன.

தீபாவளித் திருநாளன்று நாம் தீபமேற்றி லட்சுமி தேவியை வழிபடுகிறோம்.



பொதுவாகவே நாள்தோறும் சூரியோதயத்தின் போதும் சூரியாஸ்தமனத்தின் போதும் எண்ணெய் தீபம் ஏற்றுவது மங்கலங்களைத் தரும். சோம்பேறித்தனம் அழியவும் அர்ப்பணிப்பு உணர்வு பெருகவும் தீய பழக்கங்களிலிருந்து நாம் விடுபடவும் இவ்விதம் தீபமேற்றுவது பெருமளவில் துணைபுரியும்.

வெளியே தீபமேற்றுவது என்பது ஒருவரின் உள்ளொளியைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்பதன் அடையாளம் தான். சூரிய ஒளி வெளியிருளை நீக்குவதுபோல் தீப ஒளி அக இருளை நீக்கும். மனத்துக்கண் மாசில்லாத நிலை உருவாகும்.


உள்ளத்தில் ஞான தீபத்தை ஏற்றுவதன் மூலம் ஆன்மிகப் பாதையில் உள்ள எல்லாத் தடைகளையும் தகர்த்து நாம் முன்னேற அன்னை தீப லட்சுமி அருள்புரிவாள். தீபம் ஏற்றுவது நம் முன்னோர்களின் ஆசிகளையும் நமக்குப் பெற்றுத்தரும்.

தீபாவளி பண்டிகையை சீரும் சிறப்புடன் கொண்டாடுங்கள். அதே வேலையில், ஏதேனும் ஒரு ஏழைக்குடும்பத்தை தேர்தெடுத்து அவர்களது குழந்தைகள் புத்தாடை உடுத்தி, வயிறார உண்டு, மகிழ்ச்சியாக பட்டாசு வெடித்து மகிழ்வதை உங்களது தீபாவளிக் கொண்டாட்டத்தின் பகுதியாக்குங்கள். அந்த ஏழைகளின் மகிழ்ச்சியில் உங்கள் வாழ்க்கையை ஒளிர செய்யுங்களேன். மகிழ்வித்து மகிழ்வது தானே வாழ்க்கை.!

வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

## TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichits.com

★ வாய்மையே வெல்லும் ★

# இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- மருமகள்கள் அன்றும்.... இன்றும்....
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .......... 12

**சிறுகதை**

- கணக்கு... –மீ.மணிகண்டன் .......... 21

**ஆன்மிகம்**

- துலா மாதமும்... நகரத்தார்களும்...
  – ஆ.தெக்கூர் கண.இராம.நா. இராமநாதன் .......... 30

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் .......... 35

**சமையல்**

- குலாப் ஜாமூன் மிக்ஸ் அல்வா .......... 41

**கவிச்சோலை**

- வாழ்வின் ஒளி.. – கவிஞர் எம்.சோலை, காரைக்குடி. .......... 43
- எழுந்தருள்வாய் கணபதியே..!!!
  – அரு.சிவகாமி இராமனாதன், ஒக்கூர்– நவிமும்பை.......... 54
- மாண்புமிகு மனைவி – கவிச்சுடர் தஞ்சை.பழ.வள்ளியப்பன், மதுரை .......... 71

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி .......... 44

**படித்ததில் பிடித்தது**

- தேவை தெரியாவிட்டால், நீங்கள் ஏழைதான் ! .......... 47

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 53

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...
  – கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) – க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ .......... 56

**ஜோதிடம்**

- விழாக்களின் நாயகன் – சுக்கிரன்
  ஓர் ஜோதிட பார்வை – ஜோதிடர் எல்லி .......... 67

உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்
# வேல்மாறல்
## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம்
செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
46/-
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :
**96590 32994**
எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**



# மருமகள்கள் அன்றும்.... இன்றும்....



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் திருமணம் நடைபெறும் இடங்களில் தவறாமல் ஒரு திரை இசைப் பாடல் ஒலிக்கும். அனேகமாக அந்தப்பாடலை இன்றைக்கு ஐம்பது வயது நிறைந்த ஆண்களும் பெண்களும் கண்டிப்பாக கேட்டு மகிழ்ந்திருப்பார்கள். அந்தப்பாடல் ஒலிக்காமல் எந்தத்திருமணமும் நிறைவு பெறாது என்பது முற்றிலும் உண்மை.



அது வெறும் திரைப்பாடல் மட்டுமல்ல. கவியரசர் கண்ணதாசன் அவர்கள் எழுதிய அந்தப்பாடல் ஒரு பெண் மருமகளாய் புகுந்த வீட்டிற்குச்செல்லும் போது, அங்கு அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

என்ற பாடத்தைச்சொல்லும் பாடலாக அமைந்த எளிய பாடல். அந்தப்பாடல் எல்லாத் திருமண நிகழ்வுகளிலும் ஒலிக்கப்படும். சாரதாத் திரைப்படத்தில் இடம் பெற்ற கே. வி. மகாதேவன் இசையமைத்து, சூலமங்களம் சகோதிரி களும், எல்.ஆர்.ஈஸ்வரியும் சேர்ந்து பாடிய பாடல் இதோ:

*மணமகளே! மருமகளே!*
*வா! வா!*
*உன் வலது காலை*
*எடுத்து வைத்து வா!வா!*
*குணமிருக்கும்*
*குலமகளே! வா!வா!*
*தமிழ்க்கோவில் வாசல்*
*திறந்துவைத்தோம் வா!வா!*
*செல்வமகள் வாசமலர்*
*வாழ வந்த வாசல்!*
*செல்வமுடன் புகழ் மணமும்*
*சேர வந்த வாசல்!*

இதுபோல பல வகையான வாழ்த்துக்களை புதிதாக வருகின்ற மருமகளுக்குச் சொல்லிவிட்டு,நிறைவாக புகுந்தவீட்டு நிலையை, அந்தமணப் பெண்ணுக்கு புரிகின்ற வகையில் கவியரசர் எழுதியததுதான் இந்த பாடலின் மிகச்சிறப்பு. அந்த வரிகளை இன்றைக்கும் என்றைக்கும் இன்னொரு வீட்டிற்கு மருமகளாகச் செல்லும் பெண்கள் மனதிலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இதோ அந்த வைர வரிகள்:

*தங்கநகை வைரநகை*
*நிறைந்திருக்காது!*
*இங்கு வாழ வரும்*
*பெண்மணிக்கு*
*சுமையிருக்காது!*
*பொங்கிவரும்*
*புன்னகைக்கு*
*குறைவிருக்காது!*
*அதைப்பொழுதெல்லாம்*
*பார்த்திருந்தால்*
*பசி எடுக்காது!*



எவ்வளவு கருத்துள்ள அருமையான பாடல்.அன்றைக்கு இத்தகைய எண்ணங்களைத்தான் மருமகளின் மனதிலே விதைத்தார்கள் பெருமக்கள்.

தங்களது மகளுக்குத் திருமணம் செய்து வைத்து, புகுந்த வீட்டிற்கு வாழ வழி அனுப்பி வைக்கின்ற வேளையில், கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுக்கும் வேளையிலும், பெண்ணின் பெற்றோர் கருத்துமிக்க அறிவுரை சொல்லி வழி அனுப்பி வைப்பார்கள்.

மகளே நீ வாழச்செல்லும் வீடு புதிது. அங்குள்ளவர்கள் அனைவரும் உனக்கு புதிய உறவுதான். பெற்றவர்களை விட்டுப் பிரிந்து செல்வது என்பது உனக்குத்துன்பம் தரும் என்றாலும், உன்னை நாங்கள் பண்புள்ளவளாக வளர்த்திருக்கிறோம் என்பதைக்காட்டும்

விதமாக நீ அங்கு நடந்து கொள்ள வேண்டும். பிறந்த வீட்டுப் பெருமையையே நாள் தோறும் பேசிக்கொண்டு வாழாமல், புகுந்த வீட்டுப் பெருமையை நீ தூக்கிப் பிடிக்க வேண்டும். அப்போது தான் நீ சிறந்த மருமகளாக அந்த வீட்டில் திகழ்வாய்!என்று வாழ்த்தி அனுப்பி வைப்பார்கள்.



அன்றைக்கு மருமகளாகச் சென்ற பெண்கள் பலரும் தங்களின் பண்பாலும், அன்பாலும் புகுந்த வீட்டில் இருக்கும் அனைவரையும் ஈர்த்து வைத்திருந்தார்கள். தங்களின் புகுந்த வீட்டு பெருமையை தங்களின் வாழ்க்கை முழுவதும் தூக்கிப்பிடித்தார்கள். அதையே தங்களின் பெருமையாகக் கருதினார்கள். தனது மாமனார், மாமியார், மற்றும் உறவினர்களை மதித்தார்கள். மாமனார், மாமியார் இருவரது வயதின் காரணமாக அவர்களுக்கு மிகுந்த மரியாதை செலுத்தினார்கள். தனது பெற்றோராகவே அவர்களைக்கருதி இறுதி வரை பணிவிடை செய்து வாழ்ந்தார்கள்.

மருமகளாக ஒரு பெண் புகுந்த வீட்டிற்குச்செல்லும் முன்பாக அவளைப்பெற்ற தகப்பன் புகுந்த வீட்டில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னதைப்படித்து மகிழுங்கள்.

இது நடந்தது கோசல நாட்டில். அந்த நாட்டில் வாழ்ந்த தனஞ்செயன் என்பவரின் மகளான விசாகை என்பவளை புண்ணியவர்த்தனன் திருமணம் செய்து,தனது வீட்டிற்கு அழைத்துச் செல்லும் முன்பு, அவனது மாமனார் தன் மகளுக்குச் சொன்னது,"அம்மா விசாகை

நீ புகுந்த வீட்டிற்குச்சென்று வாழ்கின்ற போது கடைபிடிக்க வேண்டிய சில நடைமுறைகள் உள்ளன. அவற்றை நீ தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

1)வீட்டு நெருப்பை அயலாருக்கு கொடுக்காதே!
2)அயலார் நெருப்பை வீட்டுக்கு கொண்டுவராதே!
3)கொடுக்கின்றவர் களுக்குக்கொடு!
4)கொடாதவர்களுக்குக் கொடாதே!
5)கொடுக்கின்றவர் களுக்கும்,
கொடாதவர் களுக்கும் கொடு!
6)நகைத்துக்கொண்டு உட்காரு!
நகைத்துக் கொண்டு சாப்பிடு!
நகைத்துக்கொண்டு தூங்கு! எரி ஓம்பு!
7)குலதெய்வங்களை வணங்கு! என்றார்.



அயலார் நெருப்பை வீட்டிற்குக் கொண்டு வராதே! என்றால், வீட்டில் உள்ளவர்களைப்பற்றி மற்றவர்கள் அவதூறு சொன்னால், அவற்றை யெல்லாம் வீட்டில் வந்து சொல்லி "கலகம்" ஏற்படுத்தி விடாதே என்பது பொருள்.

கொடுக்கின்றவர்களுக்கு மட்டும் கொடு! என்றால் உன் வீட்டுப்பொருளை யாரேனும் இரவல் கேட்டால் அதைத்திருப்பிக் கொடுக்கின்றவர்களுக்கு மட்டும் கொடு என்று பொருள்.

எரிஓம்பு என்றால் மாமனார், மாமியார், கணவன் இவர்களைத் தீச்சுடர் போலக் கருதி நடந்து கொள் என்று பொருள்.

நகைத்துக்கொண்டு தூங்கு! என்றால் மற்றவர்கள் தூங்கியபிறகு தூங்கு என்று பொருள் என்றாள் விசாகை. இந்த விளக்கத்தைக் கேட்டு அவளது மாமனார் மகிழ்ந்தார். உன் தகப்பனார் உன்னைச்

நகைத்துக் கொணசரியாக வளர்த்து, நல்ல வழிமுறைகளைச் சொல்லிக்கொடுத்து, எங்களுக்கு நல்லதொரு மருமகளாகத் தந்துள்ளார் என்று பாராட்டினார்.

ஆனால் இன்றைக்கு மருமகளாக வருகின்ற பெண்கள் எப்படித் திகழ்கிறார்கள்? என்பதை நீங்களே நன்கு அறிவீர்கள்.



படித்த படிப்பும்,பார்க்கும் வேலையும், சம்பாதிக்கும் பணமும் பெண்களை வெகுவாக மாற்றிவிட்டது. தான் திருமணம் ஆன பின்பும்கூட, தன் கணவனைச்சார்ந்து வாழ வேண்டிய தேவை எனக்கில்லை என்று தான் இன்றைக்குப் பலபெண்கள் நினைக்கிறார்கள்.



தங்களது பெற்றோரைப் பேண வேண்டும் என்று நினைக்கும் பெண்கள், தனது மாமனார், மாமியாரை முதியோர் இல்லத்தில் விட்டுவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். உறவுகளைப் பேணுவதை அவர்கள் ஒருநாளும் விரும்புவது இல்லை. அதற்கு மாறாக அவர்களை தேவையில்லாமல் அதிகமாகச்சுமக்கும் பாரமாகத்தான் நினைக்கிறார்கள்.

கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோரை, தனிக் குடும்பம் ஆக்கி, அதனை தீவாக்கி மகிழ்கிறார்கள். தனித்தனி தீவாக வாழ்வதே சிறப்பு என்கிறார்கள்.

வீட்டு நெருப்பை அயலாரிடம் கொண்டுபோய் கொட்டுவதும்,அயலார் நெருப்பை வீட்டுக்குள் கொண்டு வந்து கொட்டி, அதனால் ஏற்படும் சண்டை சச்சரவுகளை, சத்தங்களைக் கேட்டு தீபாவளியைப்போல

கொண்டாடி மகிழ்கிறார்கள். இவர்களால் ஒவ்வொரு வீடும் அசுரர்கள் வாழும் நரகமாக மாறிவிட்டது.

இன்றைக்கு இத்தகைய பெண்களால் ஒவ்வொரு வீடும் வாழ்க்கை நடத்தும் இடமாக இல்லாமல், யாத்திரை செல்வோர் தங்கிப்போகும் விடுதிகளாக எப்போது மாறிவிட்டன.

இன்றைக்கு மருமகளாக விளங்குகின்ற பெண்கள் கொஞ்சம் பொறுமையும், கொஞ்சம் பெருந் தன்மையும் கொண்டவர் களாக மாறிவிட்டால், ஒவ்வொரு வீட்டு வாசலையும் தோரணங்கள் அல்லவா அலங்கரிக்கும்.



அன்புக்குரிய பண்பான பெண்களே! உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோள் தான் நான் வைக்கிறேன். "நான் சரி,நீ சரியில்லை!" என்கின்ற மனப் பான்மையை தூக்கி எறிந்து விடுங்கள்.

அது உங்களை விட்டு விலகிவிட்டால், உறவுகள் உங்களைத்தேடி ஓடிவரும். கணவன் மனவிக்குள்ளே புதிய பிடிப்பு ஒன்று ஏற்பட்டு, ஒருவருக்கு ஒருவர்தான் ஆதாரம் என்ற உன்னத நிலை உருவாகும். அதனால் தாலாட்டுக்கள் உங்களின் வீட்டில் கேட்கக்கூடும். எனவே இல்லறத்தின் புனிதத்தைப்போற்றுங்கள்! இணைபிரியாமல் என்னாளும் வாழுங்கள்! பெரியோரைத் துணையென மதியுங்கள்! ஏற்றத்தாழ்வை தூக்கி வீசுங்கள்! விட்டுக்கொடுத்து வாழப்பழகுங்கள்!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2025
43rd
ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

## இந்திய தொல்லியல் துறை

மற்றும்

## தமிழ்நாடு அரசு-இந்துசமய அறநிலையத்துறைக்குட்பட்ட
## அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யர் திருக்கோயில்

(முருகப்பெருமானுக்கு அமைந்த முதல் கற்றளிக்கோயில்)

கண்ணனூர், திருமயம் வட்டம்.


# கந்த ஷஷ்டி 2025

அனைவருக்கும் வணக்கம்.
1400 ஆண்டுகள் பழமை வாய்ந்ததும், சோழமன்னர்களால் கட்டப்பெற்று திருப்பணி செய்யப்பட்டது முருகனின் முதல்கற்றளிக் கோவிலான கண்ணனூர் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யர் திருக்கோயிலாகும்.

இங்கு கந்த ஷஷ்டி தினத்தன்று ( 27.10.2025–திங்கட்கிழமை ) "கண்ணனூர் அருள்மிகு பாலசுப்ரமண்யர் வழிபாட்டுக்குழு"வின் சார்பாக காலை 9.30 மணி அளவில் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யருக்கு " சோடச அபிஷேக வழிபாடு " நடைபெறுகிறது. தொடர்ந்து சிறப்பு சந்தன காப்பு அலங்காரம் செய்விக்கப்பட்டு 12.15 மணிக்கு தீபாராதனை நடைபெற உள்ளது.

நிகழ்விற்கு அனைவரும் வருகைதந்து முருகப்பெருமானது அருளைப் பெற வேண்டுகிறோம்.

**கண்ணனூர் அருள்மிகு பாலசுப்ரமண்யர் வழிபாட்டுக்குழு**



# கணக்கு ...

கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

"தீவாளி வருது... வீட்டுல வேலை தலைக்கு மேல கெடக்கு... கோயில் வேலைய இப்பப் பாக்கலைன்னாத்தான் என்ன?" முணுமுணுத்துக் கொண்டே அரிசிப்பையைத் தூக்கிக்கொண்டு மாவு மில்நோக்கி நடந்து கொண்டிருந்தார் ஆச்சி. தீபாவளி கொண்டாட மகன் வீடு கோவையிலிருந்தும், மகள்வீடு மும்பையிலிருந்து வருகின்றார்கள்.



மகன் வீட்டு பேத்திக்கும், மகள் வீட்டு பேரனுக்கும் தீபாவளிப் பலகாரங்களைத் தம் கைகளாலேயே மணக்க மணக்கச் செய்ய வேண்டுமென்பது ஆச்சியின் விருப்பம். அதுமட்டுமல்ல மகன் வீடும் மகள் வீடும் ஊருக்குத் திரும்பும் நாளில் அவர்கள் தேவைக்காகக் கொண்டுவரும் உடமைகளின் எண்ணிக்கையுடன் மந்திரமாக ஒன்று கூடியிருக்கும்.

அது ஆச்சியின் தந்திரமாக முழுத் தகரம் நிறையத் தேன்குழல். அவர்கள் இருக்குமிடங்களில் பணிச்சுமைக்கு நடுவே பலகாரம் செய்யத் தோதிருக்காது என்று ஆச்சி ஆளுக்கொரு தகரம் தேன்குழலை அடுக்கிக் கொடுத்துவிடுவது வழக்கம். பிரத்யேகமாக அவைகள் பேத்திக்கும் பேரனுக்குமானது. அதற்கான மாவரைக்கத்தான் மாவுமில் நோக்கி நடந்துகொண்டிருக்கின்றார் ஆச்சி. காலையில் செட்டியாரிடம், " ஏங்கிறேன், மில்லுக்குப்போய் அரிசியை அரைச்சிக்கிட்டு வாங்களேன்?" என்ற ஆச்சியின் வேண்டுதலுக்கு, "நான் கோயில் வேலையப் பாக்குறதா கொழுக்கட்டைக்கு மாவரைக்கப் போறதா? " என்று பதில் கேள்வியை வரமாகத் தந்திருந்தார் செட்டியார். "மாவு கொழுக்கட்டைக்கு இல்ல தேன்குழலுக்கு" என்று விளக்கமளித்த ஆச்சியை சட்டை செய்யாமல் சட்டை எடுத்து மாட்டிக்கொண்டு வாசற்படியிறங்கிக் கொண்டிருந்தார் செட்டியார் கோயிலை நோக்கி.



இந்தஆண்டு கோயில் கணக்கை செட்டியார்தான் பார்த்து வருகின்றார். தீபாவளிக்குத் தீபாவளி கணக்கெழுதும் பொறுப்பு கை மாற்றப்படும். இந்த ஓராண்டுக் கணக்கை செவ்வனே மேர்பார்த்த திருப்தி செட்டியாருக்கு இருக்கின்றது. இந்தத் தீபாவளியோடு அந்தப் பொறுப்பு அவர் கையைவிட்டு மாறுவதில் அவருக்கு ஒரு ஆனந்தம்.

தோளில் சுமந்த பாரத்தைத் தரையில் இறக்கிவைத்ததுபோன்று. மடியில பொறுப்பைக் கட்டிக்கொண்டு மறந்துவிடாமல் கணக்குகளை எழுதிக்கொண்டு சரியான உறக்கம்கூட இல்லாமல் சில பொழுதுகள் தவித்திருக்கின்றார் செட்டியார். வேறொன்றுமில்லை பயம்தான் காரணம். யார் என்ன

கேட்பார்களோ? எப்போது கேட்பார்களோ? என்ற ஐயம். ஒப்படைக்கத் துரிதமாகக் கணக்கு வைத்திருந்தாலும், கேட்பவர் மனநிலை எப்படியிருக்கும், எந்த நோக்கத்தில் கேட்கின்றார் என்பதை யாராலும் மதிப்பிடமுடியாது என்று எண்ணிக்கொள்வார். ஊர்ப் பொதுவான பணம் ஒருபைசா கூட தவறில்லாமல் கணக்கெழுதி வைப்பதில் வல்லுநர் செட்டியார். கோயில் வேலையாக வெளியில் செல்கையில் ஒரு தேநீர் அருந்தினாலும் அதைக் கோயில் கணக்கில் எழுத்தமாட்டார். அத்தனை சுத்தம். கணக்கறிந்தவர்கள் எழுதும் அரசாங்கக் கணக்கு போன்றதில்லை செட்டியாரின் கணக்கு. உலகத்துக்கே கனக்குச் சொல்லிக்கொடுத்த பாரம்பரியம் நகரத்தார் பாரம்பரியம் அப்பேர் கொண்ட நகரத்தார் குலத்தில் பிறந்த தான் ஒரு பைசா ஊழல் செய்தால் அது மொத்த நகரத்தார் இனத்திற்கே களங்கம் என்றெண்ணுபவர்.

மிதிவண்டி இருந்தாலும் அரிதாகத்தான் அதை மிதிப்பார். நடப்பது உடலுக்கு நன்மை பயக்கும் என்று அதிகமாக நடப்பதையே வழக்கமாகக் கொண்டவர் செட்டியார். அளவான உணவு அதிக நடை நாவில் உண்மை நாலு பேருக்கு உதவி என்று வலம்வரும் செட்டியாரைக் காணும் ஒருசிலர் 'இந்த நாளில் நீங்கள் ஒரு அரிதான பிறவி அப்பச்சி' என்று பரிசளிப்பது வழக்கம். கோயிலை வந்தடைந்த செட்டியார் குளக்கரையில் கால்களைச் சுத்தம் செய்துகொண்டார், அண்ணாந்து பார்த்து ஆலயக் கோபுரத்தைக் கைகூப்பினார், நடந்து சென்று கோயிலுக்குள் வலது காலை வைத்தார்.

வெள்ளை வேட்டியும் விபூதிப் பட்டையுமாக எதிர்ப்பட்டார் பங்காளி ஒருவர்.

"என்ன அண்ணே, நல்லாருக்கீயளா? என்னைக்கி மீட்டிங் வைக்கலாம்?" என்று கேட்டார் பங்காளி.

"அடுத்த வெள்ளிக்கிழமை தோதுப்படுமா? எல்லாருக்கும் போன் போட்டு சொல்லிறலாம்."

"வைக்கலாம்..." என்று இழுத்தார் பங்காளி.

"என்ன இழுக்குறீய..."

"இல்ல... மேலைக்கும் நீங்களே கணக்குப் பொறுப்பை ஏத்துக்க முடியுமான்னு ...", என்று மறுபடி இழுத்தார் பங்காளி. உண்மையில் அப்படிக் கேட்க அவருக்குத் தயக்கமாக இருந்தது, காரணம் ஆண்டு நிறைவடைவதும் அடுத்தவர் பொறுப்பை மேற்கொள்வதும்தான் வழக்கம். இருந்தாலும் பலூனுக்குள் அடைபட்ட காற்றுப்போல மனதில் தோன்றியதை உள்ளேயே வைத்துக்கொண்டு உருளாமல் உடைத்துக கேட்டுவிடலாம் என்று சிதறுகாய் போல பட்டென்று கேட்டுவிட்டார்.

"ஆத்தாடி நம்மால முடியாது, அடுத்த பொறுப்பாளர் யாருன்னுதான் உங்களுக்கே தெரியுமே, அவுகளையே பாக்கச் சொல்லுங்க..." என்று தன்மீது பொறுப்பு மீண்டு வந்துவிடுமோ என்ற ஐயத்தில் அவசரமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தார் செட்டியார். பங்காளி விடுவதாக இல்லை. செட்டியாரைப் பின்தொடர்ந்தார் பிள்ளையாரைத் தொடரும் எலிபோல, "அண்ணே, வெளிப்படையாவே சொல்றேன், உங்களப்பத்தி எல்லாருக்கும் நல்ல அபிப்ராயம் இருக்கு. உங்க கை சுத்தம். அடுத்ததா வரப்போறவுக எப்படின்னு உங்களுக்கும் தெரியும்..." என்று பங்காளி சொல்ல வந்ததை முடிப்பதற்கு முன் முந்திக்கொண்டார் செட்டியார். "ஏண்ணே, சுத்தமான கைக்கு இப்படியொரு தண்டனையா? யார் எழுதினாலும் கணக்கு நோட்டுல இருக்கும்ல... சந்தேகத்தைக் கேட்டுத் தெளிஞ்சுக்கலாமில்ல?" என்று எடுத்துக்கொடுத்தார் செட்டியார்.

"அண்ணே, எடுக்குறவுக எழுதாமலா எடுக்குறாக... தப்பைத் தெரிஞ்சுதானே செய்யிறாக... அதைப் பண்ணினேன், இதைப் பண்ணினேன்னு என்னவோ எழுதி வைக்கிறாக... ஆனா அது உண்மையா ஆன செலவில்லைன்னு எல்லாருக்குமே தெரியும். கடைசியா எழுதுனத சாட்சியா வச்சிட்டு தான் சுத்தம்னு சத்தமில்லாமப் போயிருவாக..."

பங்காளி எத்தனை சொன்னாலும் மறுபடி சுமை தூக்கத் தயாராக இல்லை செட்டியார். "இதுதாண்ணே இன்னைக்கி நடப்பு. மனசாட்சிக்கு பயந்த காலம்லாம் மலையேறிப் போச்சு. நீங்களும் நானும் கூடி இதை மாத்த முடியாது. அவுக என்ன நினைக்கிறாக... செய்யுற தப்பை நாலு தர்மம் பண்ணி கணக்கை நேர் செய்யலாம்னு நினைக்கிறாக... ஆனா கணக்கு அப்படி நேராகாது... இது அவுகளுக்குப் புரியல..." என்று ஒரு சென்டிமீட்டர் அளவு உதட்டளவில் புன்னகை பூத்தார் செட்டியார்.

பங்காளி மீண்டுமொருமுறை கேட்டுப்பார்த்தார், செட்டியார் தம் சொல்லில் மாறாமல் சொன்னார் "அண்ணே கோச்சுக்காதீய... யாரோ திங்கிற உப்புக்கு நான் தண்ணி குடிக்க முடியுமா? முடியாதுல்ல... அப்படித்தாண்ணே. சரி... இன்னைக்கி நான் பாக்குறேன்னே வச்சுக்குங்க... நாளைக்கு இன்னொருத்தருக்காகவும் நானே பார்க்க முடியுமா? ஒவ்வொருத்தருக்கும் பொறுப்பு வேணும்ணே... நாளைக்கு நான் கணக்கை ஒப்படைச்சிட்டு வீட்டுக்கு போனா நிம்மதியா என்னால உறங்க முடியும், ஆனா தப்புக் கணக்கெழுதுறவுகளால நிம்மதியா உறங்க முடியாது. 'தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்'னு வள்ளுவன் சொன்னான் பாருங்க அந்த மாதிரி" என்று சிரித்துக்கொண்டார் செட்டியார்.

இருவரும் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்ட பண்டாரம் கோயிலுக்குள்ளிருந்து வெளியில் வந்தார். செட்டியாரைப் பார்த்து, "ஐயா வெளிச்சுவர் பூசுறதுக்கு ஆள் வரச்சொன்னிகளாம், மேஸ்திரி வந்தார் நான்தான் ஆபீஸ் ரூமில உட்காரச் சொல்லிருக்கேன்", என்றார். பண்டாரம் சொன்ன செய்தியறிந்து பங்காளிகள் இருவரும் ஒருவரிடம் ஒருவர் விடைபெற்றுக்கொண்டனர். செட்டியார் மேஸ்திரியைக் காண ஆபீசுக்குள் சென்றார்.

மகன் வீட்டாரோடும் மகள் வீட்டாரோடும் கோலாகலமாக தீபாவளி ஒளியேற்றியது. வெடிக்கும் பட்டாசுகள் வாங்கிக் காசைக் காகிதமாக்க மகன் வீடும் விரும்புவதில்லை மகள் வீடும் விரும்புவதில்லை. மகிழ்ச்சிக்காக மத்தாப்பு வகைகள் மட்டுமே விரும்புவர். வித விதமான மத்தாப்புகளோடும், வீட்டில் ஆச்சி செய்த பலகாரங்களோடும் கொண்டாட்டம் கண்டது செட்டியார் வீட்டுத் தீபாவளி. மகன் வீட்டாரும் மகள் வீட்டாரும் ஊருக்குத் திரும்பும் நாளும் வந்தது. ஆச்சி வழக்கம் போல இரண்டு தகரங்களைச் சாமி வீட்டுக்குள்ளிருந்து எடுத்து வந்தார். தேன்குழல்களை அடுக்கி இரண்டு நாள்களுக்கு முன்னரே சாமி வீட்டுக்குள் பத்திரப்படுத்தியிருந்தார் ஆச்சி.



தகரங்களைக் கண்ட பேரனும் பேத்தியும், "அது என்ன?", என்று கோரசாகக் கேட்டனர்.

"உங்களுக்குத்தான் ராசாக்களா தேன்குழல் வச்சிருக்கேன்", என்றார் ஆச்சி.

இது எனக்கு... இது எனக்கு... என்று பேரனும் பேத்தியும் போட்டி போட்டுக்கொண்டு தகரத்தைத் தூக்கிக் கொண்டனர். எடுத்துக்கொண்ட பொழுது இருவரும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தனர்.

சற்று நேரத்தில் பேரன் தன்னுடைய தகரத்தைத் திறந்து பார்த்தான், மற்றொரு தகரத்தையும் திறந்தான். திறந்தவன் உடனே குரலெழுப்பினான், "ஏ...ய்...எனக்கு இந்தத் தகரந்தான் வேணும்", என்று சொல்லி பேத்தி வைத்திருந்த தகரத்தைக் கேட்டான். பேத்தியோ, "இந்தத் தகரம் எனக்கு, நான் தரமாட்டேன்", என்று தகரத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். சிறிது நேரத்தில் இருவருக்கும் இடையில் ஆரம்பமானது சண்டை. ஆச்சி செய்த சமாதானம் குழந்தைகளிடம் எடுபடவில்லை. பேரன் முன்வந்து, "ஆயா நாங்க சண்டை போடக் கூடாதுன்னா ஒண்ணு செய்யணும்", என்றபடி இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு குட்டி முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு கட்டளையிட்டான். சண்டை தீர்ந்தால் போதும் என்று எண்ணிய ஆச்சி, "சொல்லு, என்ன செய்யணும்", என்றார். "இந்தத் தகரத்தில எத்தனை தேன்குழல் இருக்கு என்று எண்ணுங்க, அதே மாதிரி அந்தத் தகரத்துலையும் எத்தனை இருக்குன்னு எண்ணுங்க. ரெண்டும் சமமா இருந்தா நான் சண்டை போடலை", என்றான். பேத்தியும் அதையே வழி மொழிந்தாள். இதென்னடா புதுக் குழப்பம் என்று விழித்தார் ஆச்சி அடுக்கின தேன்குழலை தகரித்திலிருந்து வெளியிலே எடுத்து எண்ணுவதெல்லாம் நடப்பில் ஆச்சி இதுவரை கண்டதில்லை. அதேவேளை குழந்தைகளைச் சமாதானம் செய்ய வேண்டும். விழி பிதுங்கினார் ஆச்சி. கணக்கெழுதும் புலி கணவரைத் தர்மசங்கடமாக நோக்கினார். சிரித்துக்கொண்டே அருகில் வந்தார் செட்டியார், "பிள்ளைகளா... அடுக்கி வச்ச தேன்குழலை எண்றது நல்ல பழக்கமில்லை... உங்களுக்கு ஒரு சேதி சொல்றேன் கேளுங்க" என்று சொல்லத் தொடங்கினார் செட்டியார்.

"மேகத்துல இருந்து மழை வருது. கொட்டுற மேகம் மழைத்துளியை எண்ணியா கொட்டுது? "

"என்னய்யா சொல்றீங்க..." புருவமுயர்த்தினர் குழந்தைகளிருவரும்.

"மும்பைல மழை வருது"

"ம்..." என்று குழைந்தைகளிருவரும் ஆர்வமாக 'ம்' கொட்டினர்.

"அதே மாதிரி கோவையிலும் மழை வருது"

"ம்..."



"மும்பைல எத்தனை துளி மழை பேஞ்சுதுன்னு நீ எண்ணுவியா?" என்றார் பேரனிடம்.

"அதெப்படி முடியும்...?" என்றான் பேரன் யோசனையோடு.

பேத்தியிடம் திரும்பினார் செட்டியார், "நீ சொல்லு, கோவையில் பேஞ்ச மழைத்துளியை நீ எண்ணுவியா?"

"முடியவே முடியாது..." என்று உதட்டைப் பிதுக்கினாள் பேத்தி.

"ஆனா... ஒண்ணா சந்திக்கும்போது நீங்க ரெண்டு பேரும் என்ன பேசிக்குவீங்க? எங்க ஊர்ல மழை பேஞ்சுது, நான் ஆனந்தமா கப்பல் செஞ்சு மிதக்க விட்டேன், எங்க ஊர்லயும் மழை பேஞ்சுது நான் குடை பிடிக்காம ஆட்டம்போட்டேன், அப்படீன்னு அந்த மகிழ்ச்சியை மட்டுந்தான் பேசிக்குவீங்க அப்படித்தானே?" என்று குழந்தைகளோடு குழந்தையாக மாறியிருந்தார் செட்டியார்.



"ஆமா ஐயா" என்று ஒரே குரலாகியிருந்தனர் பேரனும் பேத்தியும். "இப்பச் சொல்லுங்க தேன்குழலை எண்ணட்டுமா?" என்றார் ஆச்சி.

"வேண்டாம் ஆயா..." என்றான் பேரன்.

"வேண்டவே வேண்டாம் அப்பத்தா..." என்றாள் பேத்தி.

மகன் வீட்டாரையும் மகள் வீட்டாரையும் ஊருக்கு வழியனுப்பிவிட்டு விழிகளில் ஆனந்த மழை பெருக்கெடுக்க வீட்டுக்குள் திரும்பினர் ஆச்சியும் செட்டியாரும்.



# துலா மாதமும்... நகரத்தார்களும்...

– ஆ.தெக்கூர் கண.இராம.நா. இராமநாதன்

பொதுவாக நமது செட்டிநாட்டில் ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் ஒவ்வொரு விழாக்கள் நிகழும். இந்த துலா (ஐப்பசி) மாதம் புனித நதிகளில் நீராடுதல், சிவன் வழிபாடு செய்வதற்கு மிகவும் உகந்த மாதம். அந்த வகையில் சிவபெருமான் வழிபாட்டிற்கும், காவேரி வழிபாட்டிற்கும் உரிய மாதமாக ஐப்பசி மாதத்தை வைத்துள்ளனர் நம் முன்னோர்கள். கந்தன் சூரனை வதைத்ததும் தீபாவளி கொண்டாடப்படுவதும் இந்த ஐப்பசியில் தான்.

நம் நகரத்தார்கள் அமைத்த சிவாலயங்களில் இந்த ஐப்பசி மாதத்தில் தினமும் காலையில் காவேரிப்புராணம் படிப்பது வழக்கம். இந்த மாதத்தில் காலையில் நகரத்தார் ஊர்களில் உள்ள எல்லா சிவன்கோயில்களிலும் காவேரி அன்னையை போற்றி கூறும் காவேரிப் புராணம் படிப்பர். அப்போது நம் ஆச்சிகள் வீட்டில் இருந்து தங்களால் இயன்ற அளவு துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, புளி, அரிசி, கோதுமை, கடலைப்பருப்பு, சிறுதானியங்கள், நவதானியங்கள் அல்லது காய்கறிகள் போன்றவற்றை கொண்டு சென்று துலா புராணம் படிக்கும்



ஐயருக்கு தானமாக கொடுத்து காவேரிப் புராணக் கதையை கேட்பார்கள். கார்த்திகை முதல் நாள் முடவன் கடைமுழுக்கு மிகவும் விசேஷம். அன்று மாயவரம், சங்குமுகம் (பூம்புகார்), ஸ்ரீரங்கம் போன்ற தலங்களில் நம் நகரத்தார்கள் சென்று நீராடி சிவனை வழிபடுவர்.


நகரத்தார்கள் இந்த மாதத்தில் காவேரிக் கரைகளுக்கு சென்று நீராடுவது ஒரு நடைமுறை. காவேரி கரைகளில் நீராடி ஆற்றில் இருந்து மண் கொண்டு வந்து கரையில் சிவலிங்கமாக பிடித்து வைத்து அவற்றுக்கு தும்பை பூ சாற்றி சிவபெருமானை வழிபடுவர். இந்த மாதத்தில் கங்கையே தான் ஏற்று கொண்ட எல்லா பக்தர்களின் பாவத்தையும் காவேரியில் நீராடி சிவபெருமானை வழிபட்டு தன் பாவத்தை போக்கிக்கொள்கிறாள் என்பது ஐதீகம். அந்த வகையில் இந்த மாதத்தில் காவேரியில் நீராடுதல் மிகவும் நற்பலன்கள் தரக்கூடியது.

மேலும் இந்த மாதத்தில் அனைத்து நகர சிவாலயங்களிளும் சோமவார சங்காபிஷேகம் சிறப்பாக நிகழும். பொதுவாக நகரத்தார்கள் முருகனையும் சிவனையுமே தம் தலையாய தெய்வாமாக கொண்டு வழிபடுகின்றனர். அதனால் இந்த மாதத்தில் சிவன்பெருமானை வழிபடுவோர் சோமவார விரதத்தை கடைபிடித்து வழிபடுவோர். ஐப்பசி மாதத்தில் வரும் திங்கள்கிழமையன்று சிலர் உண்ணா நோன்பிருந்தும் ஒருவேளை உண்ணா நோன்பிருந்தும் சிவனை வழிபடுவர்.



ஐப்பசி பௌர்ணமி நாளில் சிவபெருமானுக்கு அன்னாபிஷேகமும் எல்லா நகரத்தார் சிவாலயங்களிலும் நிகழும்.

அன்று மாலை சோறு வடித்தும் அதிரசம், முறுக்கும் போன்ற இனிப்புகள் செய்தும், காய் கனி மாலைகள், புடலங்காய், காரட், போன்ற காய்கறிகளை அவித்து வைத்து சிவனுக்கும் அன்னத்தை கொட்டி அபிசேகமாக செய்யப்படும். இவ்வாறு அபிஷேகம் செய்யப்படும் அன்னத்தில் சிவனே காட்சி தருகிறார் என்பது ஐதீகம். பின் அந்த அன்னத்தை பக்தர்களுக்கும், காக்கை, குருவி, மீன்கள் போன்ற உயிர்களுக்கும் அன்னத்தை அளிப்பது வழக்கம்.



இந்த மாதத்தில் நகரத்தார்கள் தீபாவளி திருநாளை காசிக்கு சென்று புனித நீராடி விஸ்வநாதர் விசாலாட்சி அன்னையை வழிபட்டு இங்கு நிகழும் மிட்டாய் திருவிழாவை காண்பர். தீபாவளியன்று காசி நகரில் அண்ணபூரணி லட்டு தேரில் பவனி வருவதைக் காணக் கண்கோடி வேண்டும். அது மட்டுமா இந்த தீபாவளியையொட்டி நம் காசி நாட்டுகோட்டை நகரத்தார் சத்திரத்திற்கும் தங்க அண்ணபூரணி, காசி விஸ்வநாதர் மற்றும் விசாலட்சி அன்னை உற்சவர்கள் இந்த மூன்று நாட்களுக்கு மட்டும் நம் நகர விடுதிக்கு கொண்டு வந்து சிறப்பாக பூசைகள் நிகழும். இதை காண நகரத்தார்கள் பலர் இங்கு வருவது வழக்கம்.



தீபாவளி திருநாளில் நகரத்தார்கள் தங்கள் இல்லங்களில் காலையில் குபேரன், லக்ஷ்மிக்கும் பூசை செய்து வழிபடுவர் சில வீடுகளில் கும்பம் வைத்து லட்சுமியை பூசை செய்வர். பின் பெரியவர்கள் வீட்டில் விளக்கேற்றி வைத்து பிள்ளைகளுக்கும் மஞ்சள் தடவி வைத்த புத்தாடைகளை தருவர். புத்தாடையை பெறும்போது பெரியவர்கள் காலில் விழுந்து ஆசிகள் பெற்று பெரியவர்கள் திருநீறு பூசி அவற்றை பெற்றுக் கொள்ளவர். இந்த வழக்கம் இன்றும் நம் வீடுகளில் நடைமுறையில் உள்ளது. அதன் பின் அருகில் உள்ள ஆலயம் சென்று வழிபட்டு வருவது வழக்கமாக உள்ளது.

தலை தீபாவளி என்றால் நம் செட்டிநாட்டில் மாப்பிள்ளை வீட்டிற்கும் தீபாவளி பலகாரங்ளுடன் கெண்ட வேட்டி, சேலை எடுத்துக் கொடுத்து தீபாவளிக்கு முன்பு வந்து பெண்வீட்டார் அழைத்து விட்டு செல்வர். புதிதாக திருமண மாணவர்கள் தங்கள் மாமியார் வீட்டுக்கு மணமகன் சென்று அவர்களுடன் தீபாவளி கொண்டாடுவதும் அவர்கள் தங்கள் வீட்டில் அன்று காசப்பு (அசைவ) எடுத்து விருந்து வைப்பதும் வழக்கம்.



ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்து வரும் நாட்களில் கந்த சஷ்டி மிகவும் கோலாகலமாக நிகழும். இந்த விழாவை காணவும் பல நகரத்தார்கள் விரதம் இருந்து முருகனை வழிபட திருச்செந்தூர் நகரவிடுதிக்கு வந்து தங்கி சூரசம்ஹாரத்தை காண்பர்.

இது மட்டும் அல்லது பரவலாக நகரத்தார்கள் பல முருகன் கோயில்களில் இந்த விழாவை நிகழ்த்தி முருகனை வழிபடுவர்.

நகரத்தார்கள் இந்த மாதத்தில் காவிரிப்புராணம், கந்தபுராணம் படித்து நல் வழியில் வாழ்வை எதிர்கொள்ளவேண்டும் என்ற நோக்கில் பக்தி நடைமுறைகளை கொண்டிருந்தனர். இந்த காவிரிப் புராணம் படித்தல் என்பது தற்போது உள்ள தலைமுறையினர் அறியாத ஒன்றாகவும் மறந்து வரும் ஒன்றாக உள்ளது. தற்போது இந்த நிகழ்வு (காவேரிப் புராணம் படித்தல் ) நம் சென்னை மயிலை காபாலீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறுகிறது.

நகரத்தார் வாழ்வியலையை நம் இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லி இத்துலா மாதத்தில் இறையவனை தொழுது விழா நாட்களை இன்பமுடன் கொண்டாடுவோம்.



இக்கட்டுரை ஆசிரியர் இராம.நா. இராமநாதன் ஆ.தெக்கூர் – மாத்தூர் மணலூர் பிரிவை சார்ந்த நகரத்தார். சென்னையில் பணியாற்றி வரும் பொறியியல் பட்டதாரியான இவர் மொழி வரலாறு தொல்லியல் மற்றும் சிற்பக்கலையில் ஆர்வமிக்கவர். மேலும் தொல்லியல்.சிற்பக்கலையில் பகுதி நேர பட்டய படிப்பு படித்தவர். இலக்கியம் தொல்லியல், சுதை சிற்பங்கள் சார்ந்த அறிவுசார் தகவல்களை ஆவண படுத்தி வரும் ஆர்வலர் மற்றும் வலைப்பதிவர்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 17

– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!



### ஈருயிர்

"ஆத்தா! சாலா, நீ இப்ப முன்னமாதிரி இல்ல. இப்ப ரெட்ட உசுரா இருக்க. நல்லா சாப்புடு அப்பத்தான் தெம்பா இருக்க முடியும்" என்று அக்கறையுடன் சொல்லப்படும் வார்த்தைகளில் "ரெட்டை உருசு" என்பது ஈருயிர் என்ற சொற்களில் இருந்து மருவி வந்துள்ளன. கருத்தாங்கி இருப்பதால் பெண்ணும் கருவும் சேர்ந்து ஈருயிர் ஆகிறார்கள்.

### ஈத்தரை

"நானும் எவ்வளவோ பேர பார்த்துருக்கேன். ஆனா, கண்டனூரு மாரியப்பன மாதிரி ஒரு ஈத்தரப் பயல பாத்ததேயில்லை" இங்கு ஈத்தரை என்பது மிகவும் கீழ்த் தரமான செயல்களைச் செய்யும் ஒருவரைக் குறிப்பிடுகிறது.

இழிவான காரியங்களைச் செய்வதையே தனது பழக்கமாகக் கொண்டு இழிந்த நிலையில் இருப்பவனே ஈத்தரை என்று அழைக்கப்படுவான். இழி – தாழ் + தரம் – நிலை + ஐ = இழித்தரை, இயித்தரை, ஈத்தரை = இழிவான நிலையில் இருப்பவன்.

### ஈவுசோவு

"ஏண்டா! சரவணா, ஈவு சோவு பாத்து பேசுறதில்ல. இப்ப எவ்வளவு பெரிய பிரச்சனையாயிருச்சு பாரு" இங்கு குறிப்பிடப்படும் ஈவுசோவு என்பது ஈவுசோர்வு என்ற சொற்களின் சுருக்கமே. இதற்குச் சூழ்நிலை அமைவு எனப்பொருள்கொள்ளலாம். காலம், இடமறிந்து, சூழ்நிலை அறிந்து பேசவேண்டும் என்பதற்காக இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

### உக்கிராணம்



"பார்வதி, சமயக்காரன நம்ப முடியாது. உக்கிராணத்துக்கு வெள்ளையம்மாவ கூப்புட்டுறு. அவ நல்லா பாத்துப்பா" இங்கு உக்கிராணம் என்பது இன்று வரை திருமணங்களின் போது மளிகை, காய்கறிகளைப் பாதுகாத்து, சமையல் காரர் கேட்கும் போது, எவ்வளவு தேவை என்பதை அறிந்து, அளந்து கொடுப்பவர் ஆவார். உக்கரணம் என்பதற்கு சரக்கறை என்பது பொருள். சரக்குப் பொருள்களை வைத்துப் பாதுகாக்கும் அறைக்கு உக்கரணம் என்பது பெயர். அதுவே. பின்னாளில் அவ்வறையைப் பாதுகாப் பவருக்கும் பெயராகிவிட்டது. உள்+ கரணம் = உட்கரணம், உக்கரணம், உக்கிராணம்.

### உக்காரை



"பழனியப்பா! கலியாணத்துல இலையில வைக்கிற ஒரு இனிப்புக்கு உக்காரை போட்டுறு. அதுதான் நம்ம வீட்டு விசேசங்களல்ல எல்லாம் விடாம போட்டுட்டு வர்றோம்" என்று கூறுவதில் உள்ள உக்காரை என்பது நம்மவர்கள் பகுதியில் மட்டுமே செய்யப்படும் சிறப்பான இனிப்பு வகை. உஃகுல்லி – உக்குல்லி – உக்கலி – உக்காலை – உக்காரை என்றாகிறது.

### உக்கி

ஏண்டி! ரெத்தினம், நாஞ் சொல்லச் சொல்லக் கேக்காம, சுவத்துல ஏறுன இல்ல. 50 உக்கி போடு அப்பத்தான் உனக்கு புத்தி வரும். கீழ விழுந்து தொலச்சா என்ன பண்ணுறது?" என்ற கண்டிப்போடு சொல்லப்படும் உக்கி என்பது ஒரு வகையான தண்டனை. இரு காதையும் இரு கையால் மாறி மாறிப் பிடித்துக்கொண்டு,

உட்கார்ந்து எழுவது தோப்புக் கரணம். இன்றும் கிராமத்துப் பள்ளிகளில் இத்தண்டனை வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.



தினமும் காலையில் எழுந்தவுடன் 25 உக்கி போட்டால், மூளையையும், உடலையும் சேர்த்து தூண்டி, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது, இன்றைய நம் குழந்தைகளுக்கு இது என்னவென்றே தெரியாது.

### உக்கிப் போதல்

"ஐஞ்சாவது படிக்கயிலையெல்லாம் ஹாஸ்டல்லையா விடுவாங்க. விவரம் தெரிஞ்ச பிள்ளைகள விடலாம். பாரு! பிள்ளை எப்படி உக்கிப் போச்சுன்னு" உக்கிப் போதல் என்பதற்கு உருகிப் போதல், இளைத்துப் போதல் என்று பொருள் கொள்ளலாம்.

### உச்சாணிக் கொம்பு

"அடங்கிப் போற நேரத்துல அடங்கிப் போ.பேச வேண்டிய நேரத்துல பேசுன்னு எத்தன தடவ சொன்னேன்.அவன் சொன்னதுக்கெல்லாம் தலையாட்டிட்டு வந்துட்ட. இப்ப அவன் உச்சாணிக் கொம்புல ஏறி உக்காந்துருக்கான். இப்ப என்ன பண்ணப் போற? " என்று புத்தி சொல்லியும் கேட்காத தன் பிள்ளைகளிடம் கேள்வி கேட்கும் ஐயாக்களைப் பார்த்திருக்கிறோம். இங்கு உச்சாணிக் கொம்பு என்பது, எல்லாவற்றிலும் உயரமானது என்பதைக் குறிக்கும். யாராலும் எட்டமுடியாத உயரம் எனப் பொருள் கொள்ளலாம்.

### உச்சிக் காலம்



"ஆத்தா! உச்சிக்காலப் பூசைக்கு நேரமாச்சு வெரசா வா" என்று அழைக்கும் அப்பத்தாக்கள் உச்சிக் காலம் என்று குறிப்பது கோயிலில் மதிய நேரத்தை. சிவாலயங்களில் நடைபெறும் ஆறு கால பூஜைகளில், திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தஜாமம், பள்ளியறை ஆகிய ஆறு காலங்களில் பூஜைகள் நடைபெறும். இதில், உச்சிக்கால பூஜை நண்பகல் நேரத்தில் நடைபெறும்.


### உச்சிக் குழி

"அப்பத்தா! இது என்ன பாப்பா தலையில இந்த இடத்துல அமுங்குது? ஆத்தாடி! பிள்ளையத் தாடா. உச்சிக் குழிய அமுக்கிப்புட்டியாடா? ஏண்டி! முத்து. பிள்ளைய இப்புடியா தனியா படுக்கப்போட்டுட்டு போவ?" என்று பதறும் ஆச்சிகளைப் பார்த்திருப்போம். இங்கு உச்சிக் குழி என்பது, பிறந்த குழந்தைகளின் தலையின் உச்சியில் காணப்படும் மென்மையான பகுதியைக் குறிக்கிறது. இது மண்டை ஓட்டின் எலும்புகள் முழுமையாக இணையாததால் உருவாகிறது.

### உச்சுக் கொட்டுதல்

"ஏண்டா! நான் இவ்வளவு தூரம் வயசானவ பேசிக்கிட்டு இருக்கேன். மரியாதையில்லாம உச்சுக் கொட்டிட்டுப் போற" இங்கு உச்சுக் கொட்டுதல் என்பது, வாயால் "உச்" என எழுப்பப்படும் வெறுப்புக் குறி. அலட்சியப்படுத்தும் போது இவ்வாறு செய்வது இயல்பு.

– தொடர்ந்து பேசுவோம்


நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்
இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்
Naam Nagarathar Mobile App
இனி என்றும்.. எப்போதும்.. உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...
GET IT ON Google Play







நீங்கள் தீபாவளி பண்டிகைக்கு வீட்டில் பலகாரம் செய்யும் பழக்கம் கொண்டவரா? இந்த வருட தீபாவளிக்கு ஒரு வித்தியாசமான பலகாரம் செய்து உங்கள் வீட்டில் உள்ளோரை அசத்த நினைக்கிறீர்களா? அப்படியானால் குலாப் ஜாமூன் மிக்ஸ் அல்வா செய்யுங்கள். இந்த அல்வா செய்வது மிகவும் சுலபம் மற்றும் அனைவரும் விரும்பி சாப்பிடும் வகையில் ருசியாக இருக்கும். முக்கியமாக பண்டிகை என்றால் அனைவரது வீட்டிலும் குலாப் ஜாமூன் மிக்ஸ் வாங்கி குலாப் ஜாமூன் செய்வோம். ஆனால் இந்த வருடம் சற்று வித்தியாசமாக குலாப் ஜாமூன் மிக்ஸ் அல்வா செய்யுங்கள்.

இந்த இதழில் குலாப் ஜாமூன் மிக்ஸ் அல்வா எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து இந்த தீபாவளிக்கு செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## தேவையான பொருட்கள்:

- குலாப் ஜாமூன் மிக்ஸ் – 1 கப்
- தண்ணீர் – 1 1/2 கப்
- நாட்டுச் சர்க்கரை – 1/2 கப்
- முந்திரி – 2 டேபிள் ஸ்பூன் (உடைத்தது)
- நெய் – 1/4 கப்
- ஏலக்காய் பொடி – 1/4 டீஸ்பூன்

**செய்முறை:**

- முதலில் மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தையும் தயாராக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.
- பின் ஒரு பாத்திரத்தில் குலாப் ஜாமூன் மிக்ஸ், நாட்டுச் சர்க்கரை மற்றும் நீர் சேர்த்து கட்டிகளின்றி நன்கு கலந்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் நெய் ஊற்றி சூடானதும், முந்திரியை சேர்த்து பொன்னிறமாக வறுத்து, தனியாக ஒரு தட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.
- பிறகு அதே வாணலியில் கலந்து வைத்துள்ள குலாப் ஜாமூன் மிக்ஸ் கலவையை ஊற்றி குறைவான தீயில் வைத்து நன்கு கட்டிகளின்றி கிளறி விட வேண்டும்.
- கலவையானது கெட்டியாக ஆரம்பிக்கும் போது, சிறிது நெய்யை ஊற்றி, குறைவான தீயில் வைத்து, பாத்திரத்தில் ஒட்டாமல் அல்வா பதத்திற்கு வரும் வரை கிளறி விட வேண்டும்.
- கலவை அல்வா பதத்திற்கு வந்ததும் மீதமுள்ள நெய்யை ஊற்றி கிளறி, வறுத்த முந்திரி, ஏலக்காய் பொடி சேர்த்து நன்கு கிளறி இறக்கினால், குலாப் ஜாமூன் மிக்ஸ் அல்வா தயார்.

இந்த அல்வா மிதமான சூட்டில் சாப்பிடுவதற்கு சுவையாக இருக்கும்.

பகிர்வு :
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.



இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்



# வாழ்வின் ஒளி

தீப ஒளித் திருநாளில் மலரும் மகிழ்வோடு
எண்ணை வைத்து தலை குளிக்க உலவும் நெகிழ்வோடு

கை குலுக்கி வாழ்த்துகளை பரிமாறும் நிறைவோடு
கை தொடாத வன்மங்களை மறந்திடுவோம் அடியோடு

அள்ளி அள்ளித் தெளிக்கின்ற இன்பத்தைப் போலே
சொல்லிச் சொல்லி ஒலிக்கின்ற எண்ணத்தைப் போலே

பரவி இருக்கும் பைந்தமிழால் தீப ஒளி வாழ்த்து
உறவில் நனைக்கும் ஒருநாளாய் தீமை ஒழிய வாழ்த்து

சிறார்களும் பெரியோரும் புத்தாடை உடுத்தி
பாதுகாப்பாய் பத்திரமாய் பட்டாசு கொளுத்தி

இனிப்பு வகைப் பலகாரங்கள் இல்லத்தில் படைக்க
அண்டைவீட்டார் அனைவருக்கும் பகிர்ந்தே கொடுக்க

இந்தத் தீபாவளித் திருநாளை தினமும் வழங்கு
இந்தக் கோரிக்கைக்கு கருணையோடு இறைவா இணங்கு

கடவுளிடம் தொடருவோம் உளமாற வேண்டுதலை
கடவுள் தர யார் தடுப்பார் நமை மாற்றும் மாறுதலை



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



பெண் கதவு... ஆண் பூட்டு..! – 17

# இவளல்லவோ என் மனைவி



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

மீண்டும் ஒரு ஜென்மத்தில் சந்திப்போமா எனத் தெரியாது..! இருக்கும் இந்த ஜென்மத்தில் எந்த உறவுகளையும் வெறுக்காதீர்கள். உண்மையான ஆண் யார்? தேவதைப் போல ஒரு மனைவி கிடைக்க வேண்டும் என்பதை தாண்டி கிடைக்கும் மனைவியைத் தேவதை போல பார்த்துக் கொள்பவனே உண்மையான ஆண்.



மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று... எனத் திரைப்படப்பாடல்களில் ஏக்கத்தோடு பாடும் ஆண்மகனின் விருப்பம் மனைவியாக அமைய இருக்கும் பெண், இவ்வாறு இருந்தால் இன்பம் பெருகும், என்பதாக ஒரு கவிஞன் பாடிய பாடல்.

விளையாட துணையாகி இன்பம் சேர்த்து ;
வேடிக்கைப் பேச்சாலே துன்பம் போக்கி ;
சளையாமல் அன்பனுக்கு பணிகள் செய்து ;
கதைபேசும், மனையாட்டி இன்பப் பாவை ;
– இத்தகைய இன்பப்பாவை எல்லா ஆண்களுக்கும் கிடைப்பதில்லை.



கிடைத்த ஆண்கள் கொடுத்து வைத்தவர்கள், இருப்பினும் அன்பான மனைவிகள் சிறு அறியாமையால் செய்யும் தவறுகளைச் சில ஆண்கள் சுட்டிக்காட்டாமல் பெருந்தன்மையோடு, கடந்து சென்றுவிடுவார்கள். அவர்கள் மதிக்கத் தக்கவர்கள்.

கணவன் சாப்பிட்டு முடித்த பிறகு, சாப்பிட துவங்கிய மனைவி சொன்னாள், "என்னங்க சாம்பாரில் உப்பே இல்லை, நீங்க சொல்ல மாட்டீங்களா". "சாம்பார் சாதத்தைநானே சாப்பிட்டு ருசி பார்த்திருந்தால் உப்பில்லை என்று சொல்லிருப்பேன். நீ ஊட்டி விட்டாய், எப்படி சொல்வேன், நீ ஊட்டி விட்ட போதையிலே உப்பில்லாதது மறந்து போனது அன்பே" என்றான். இதுவன்றோ இன்ப வாழ்க்கை.

சிவாவின் மனைவி ராதா பம்பரம் போல் சுழன்று சுழன்று வேலை செய்வாள். அவ்வளவு சுறுசுறுப்பு, பார்ப்பவர்கள் எல்லாம் இந்தப் பெண் சிறிது கூட ஓய்வெடுக்காமல் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்கிறாளே என சிவாவின் நண்பர்கள் ஆச்சரியப்பட்டுப் போவார்கள். ஒரு நாள் ராகவன் கேட்டே விட்டான்.

"நண்பா உன் மனைவி மட்டும் எப்படி, இப்படி சுறுசுறுப்பாக சளைக்காமல் வேலை செய்கிறாள்". 'அது ஒரு ரகசியம். ஆனால் இந்த ரகசியத்தை வேறு யாரிடமும் சொல்லாதே" எனச் சொல்லி சொன்னான்.



"நண்பா காலையில் அவளை முத்தமிட்டு எழுப்பி, ஒரு காபி கொடுப்பேன். அதுதான் அவளுக்கு நான் தரும் எனர்ஜி டானிக் அப்பொழுது துவங்கி இரவு நான் உறங்கும் வரை எனக்குத் தேவையானதைச் செய்ய என்னவள் பம்பரமாய் சுழல்வாள். நீயும் முயற்சி செய்து பார்" என்றான்.

மறுநாள் ராகவன் அதிகாலை எழுந்து சிவா சொன்னதைச் செயலில் காட்ட பெட்டிப்பாம்பாய் சுருண்டாள் அவன் மனைவி. ஆகவே மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பதை மாற்றி கணவன் நடக்கும் விதம் எனச் சொல்வோம். அதே வேளையில் "காலங்காத்தால என்ன பல் துலக்காமல் முத்தமெல்லாம் கொடுத்துக்கிட்டு, போயி வாயக்கழுவுங்க" என்பதான வார்த்தைகளும் வரலாம்.. இருப்பினும் 'இவளல்லவோ என் மனைவி' என ஒவ்வொரு கணவனும் மகிழ்வோடு பாட வேண்டுமெனில் தன் நடத்தையை சற்று மாற்றிக் கொள்வது அவசியம்.

ஒரு காலத்தில் பெண்கள் செய்த வேலையைப் பங்கு போட இன்று, குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், அரவை இயந்திரம் போன்றவைகள்வந்து விட்டன. குளிர்சாதனப் பெட்டி உள்ள வீடுகளின் கணவர்களுக்கு நான்கு வகையான சட்னி கிடைக்கிறது. காலைல வச்சது, நேற்று வச்சது, முந்தாநாள் வச்சது, அதற்கு முன் வச்சது என வேறு வழிஇன்றி பழையதைத் தின்று பரலோகம் செல்ல பலர் பழகிவிட்டனர்.

ஆரோக்கியமான உணவுகள் உண்ட நம் முன்னோர்கள் 100 ஆண்டுகள் வாழ்ந்தனர். இன்று ஆரோக்கியம் கெட்டு 30,40 வயதுகளிலேயே விடைபெறுவது, விஞ்ஞானம் 2025 கண்ட புதுமை.

நன்றி : ஓவியம். மோகன் மணிமாலா

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# தேவை தெரியாவிட்டால், நீங்கள் ஏழைதான் !

ஒரு ஊரில் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. மக்களெல்லாம் பொங்கி எழுந்து இறைவனிடம் சென்று முறையிட்டனர்.



இவர்களின் நிலை கண்டு பரிதாபப்பட்ட இறைவன், சற்று மனமிரங்கி, பணக்காரர்களிடம் இருந்த பணத்தை எடுத்து ஏழைகள் எல்லோருக்கும் பகிர்ந்தளித்தான்.

பத்து ஆண்டுகள் கழிந்தன. அவர்களின் நிலையை அறிய ஆவலுடன் இறைவன் அந்த ஊருக்குச் சென்றான். முன்பு யாரெல்லாம் ஏழைகளாகவும். எவரெல்லாம் பணக்காரர்களாகவும் இருந்தார்களோ அவர்களே திரும்பவும் ஏழைகளாகவும், பணக்காரர்களாகவும் மாறி இருந்ததைக் கண்டு, மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

இந்தச் சிரிப்புக்குக் காரணம் என்ன தெரியுமா? அவரவரது 'எண்ணங்கள்' தான்!

இதெல்லாம் கதை' என்று நீங்கள் நினைத்தால், ஒரு உண்மைச் சம்பவத்தையும் நாம் பார்ப்போம்.

இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றின் உளவியல் துறையினர் வித்தியாசமான ஆய்வினை மேற்கொண்டனர்.



அங்கு படித்துக் கொண்டிருந்த சுமார் 600 மாணவர்களிடம் அவர்களுடைய எதிர்காலத் திட்டங்கள் பற்றி குறிப்பெடுத்தனர். 25 ஆண்டுகள் கழித்து திரும்பவும் அதே மாணவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களின் நிலை என்ன என்பதைக் கேட்டறிந்த போது, மிகப் பெரிய ஆச்சரியம் அவர்களுக்கு ஏற்பட்டது.

அதாவது, 600 பேரில் இருபது விழுக்காட்டினர் வாழ்வின் உச்சத்தில் இருந்தனர். முப்பது விழுக்காட்டினர் வாழ்வின் தாழ்வு நிலையில் வாழ்ந்து வந்தனர். மீதமுள்ள ஐம்பது விழுக்காட்டினர் இப்படியும் இல்லாமல், அப்படியும் இல்லாமல் நடுத்தர நிலையில் இருந்தனர்.

இதில் ஆச்சிரியம் என்னவென்றால், வெற்றி பெற்ற இருபது விழுக்காட்டினர்தான் 25 ஆண்டுகளுக்கு முன்பே தாம் என்னவாக வேண்டும் என்கிற தெளிவைக் கொண்டிருந்தனர்.

வாழ்க்கையின் தாழ்வு நிலையில் இருந்த முப்பது விழுக்காட்டினர் 25 ஆண்டுகளுக்கு முன்பே எதிர்மறைச் சிந்தனைகளோடுதான் இருந்தனர். மீதமுள்ள பெரும்பாலானோர் பெரிய எண்ணங்களோ திட்டங்களோ இல்லாமல், அதே நேரம் போகிற போக்கில் வாழ்க்கையை வாழக்கூடிய தன்மையோடு இருந்தனர்.




'எண்ணங்கள்' தான் மனிதனை உருவாக்குகின்றன என்ற சிந்தனையை, உலகம் உணர்ந்தது இந்த ஆய்விற்குப் பிறகுதான். ஆம்.. நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் எதுவாக நினைக்கிறீர்களோ, அதுவாகவே ஆவீர்கள்.

நாம் நிர்ணயித்து வைத்திருக்கிற இலக்குகளை 'நம்மால் முடியும்' என்று நாமே முதலில் எண்ண வேண்டும். பிறகு அதைப்பற்றி திரும்பத் திரும்பத் திரும்பப் பேசி சுற்றத்தாரையும் நம்ப வைக்க வேண்டும்.

அது அவர்கள் மூலமாக பிறருக்கும் பரவி, நம் இலக்கு சார்ந்த ஆர்வமுள்ள மனிதர்களை நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கும். உதாரணத்திற்கு உங்களுக்குத் தெரிந்த ஒரு மாணவர், 'நான் ஐ.ஐ.டி.யில் சேர விரும்புகிறேன்' என்று உங்களிடம் சொன்னால், நீங்கள் உடனே ஒரு ஐ.ஐ.டி. பேராசிரியரையோ அல்லது ஐ.ஐ.டி மாணவரையோ அல்லது பயிற்சி மையத்தையோ பரிந்துதரைத்து, அவருக்கு உதவுவீர்கள். அதன் மூலம் அம்மாணவர் தன் இலக்கை அடைவதற்கான அடுத்த நிலைக்குச் செல்வார்.



ஒருவேளை அவர் தன்னுடைய இலக்கை நம்பாமல் இருந்து, அதை உங்களிடம் சொல்லாமல் இருந்திருந்தால், இந்த உதவி அவருக்கு கிடைத்திருக்காது அல்லவா?

உலகமே உங்களுக்கு உதவக் காத்திருந்தாலும், உங்கள் தேவை என்னவென்று உங்களுக்கே தெரியாவிட்டால் அல்லது வெளியே சொல்லாவிட்டால் நீங்கள் வாழ்க்கை முழுவதும் ஏழையாகக்கத்தான் இருப்பீர்கள்.

சரி. இலக்கு அவசியம்: அதை நம்ப வேண்டியதும், வெளியில் சொல்ல வேண்டியதும் மிக முக்கியம். அடுத்து என்ன?

இலக்கை அடைவதற்கான 'செயல் திட்டம்! இதற்கு பூதக்கண்ணாடி உத்தி மிகவும் பயன்படும்.

அதாவது, உங்கள் இலக்குகளை பூதக்கண்ணாடி கொண்டு அருகில் வைத்து கூர்ந்து பார்க்க வேண்டும் ஐந்தாண்டு கனவை ஐந்து பகுதிகளாகப் பிரித்து ஆண்டுதோறும் நாம் என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு, பின்னர் ஓராண்டு திட்டத்தை 12 பகுதிகளாகப் பிரித்து மாதத் திட்டத்தை வகுத்து, பிறகு வாரந்திர திட்டத்தையும் உருவாக்கலாம்.

'இதெல்லாம் சாத்தியப்படுமா?' என்று கேட்டால். 'படும்'! உங்களை நீங்கள் நம்பினால், உங்கள் எண்ணத்தை நீங்கள் மதித்தால்.




நினைவில் கொள்ளுங்கள்.. பூதக்கண்ணாடி வைத்துப் பார்க்கிற போது, உங்கள் தவறுகளும், இயலாமைகளும்கூட பெரிதாகத் தோன்றலாம். அவை உங்களை ஆளுமை செய்ய அனுமதிக்காமல், அவற்றிற்கு தீர்வினை உருவாக்க வேண்டியதும் அவசியம்!

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் உங்கள் முன் இரண்டு கேள்விகள் வைக்கப்படும்.


'என்னால் முடியாது' என்ற நெகட்டிவ் சிந்தனையோடு புலம்பிக் கொண்டே இந்த உலகை எதிர்கொள்ளப் போகிறீர்களா? அல்லது 'என்னால் நிச்சயம் முடியும் என்ற பாசிட்டிவ் சிந்தனையோடு, உற்சாகமாக. இந்த உலகை எதிர்கொள்ளப் போகிறீர்களா?




இந்த இரண்டில் எதை நீங்கள் தேர்ந்தெடுக்கப் போகிறீர்களோ, அதைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை அமையும்!

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான
கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## பட்டாம்பூச்சி



படபடவென்று சிறகடித்து
... பட்டாம்பூச்சி வந்தாயோ
பலப்பல வண்ண ஓவியத்தை
... பறக்கும் சிறகில் கொண்டாயோ
பசித்தால் உனக்கு உணவாகப்
... பூவில் தேனை உண்பாயோ
பக்கம் நானும் வந்தாலே
... பயந்து நீயும் பறப்பாயோ!

## அரிசி மாக்கோலம்

அழகாம் வாசல் கோலம்
... அம்மா போடும் கோலம்
உரலில் அரிசியை வைத்து
... உலக்கை கொண்டு இடித்த
மாவில் போடும் கோலம்
... வாசல் முழுதும் இருக்கும்
வாயில் மாவை சுவைக்க
... வரிசையில் எறும்புகள் ஊறும்!



# எழுந்தருள்வாய் கணபதியே..!!!

காலை எழுந்தவுடன் கண்விழிப்பது உன்முகமே
கைகொட்டி உக்கியிட்டு கருத்தினில் நிறைத்தேனே
எழுத்தாணி எடுக்கையில் முதல் எழுத்து உம்சுழியே
எழில்வடிவே கணபதியே எமைக்காக்க எழுந்தருள்வாய்

வெள்ளை வேட்டி உடுத்தியே வேழமுகா வருவாயே
வெள்ளருகு விநாயகா வினைதீர்க்கும் கணபதியே
மங்களங்கள் யாவையும் தங்கவைப்பாய் எம்மிடமே
மறவாமல் உனைதுதிக்கும் வரமளிப்பாய் கணபதியே

சக்திஉமை பாலகனே சித்தி விநாயகனே
சங்கடங்கள் அகற்றிடுவாய் மனசஞ்சலங்கள் போக்கிடுவாய்
தொந்திக் கணபதியே உனைவிஞ்சிய தெய்வமுண்டோ?
பிந்தி வரும் என் செய்கை முந்தி முதல் வணங்கினேன்

கந்தனுக்கு மூத்தோனே கருணைவடிவே கணபதியே
விண்ணோரும் மண்ணோரும் பணிவது உன் பாதமே
பிரணவத்தின் மெய்ப்பொருளே புத்தியுடை பெருந்தகையே
எனையாளும் முதலோனே எழுந்தருள்வாய் கணபதியே





–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.

அலைபேசி எண்ணில் G Pay செய்ய:

**97917 76534**

**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

D-Link®
Building Networks for People

D–Link (India)

நிறுவனத்தை பற்றி:–

D Link (India) Limited
NSE: DLINKINDIA BSE: 533146

இந்தியாவில் முன்னணி நெட்வொர்க்கிங் தீர்வுகள் வழங்குநராக உள்ளது, உயர்தர, நம்பகமான நெட்வொர்க்கிங் தயாரிப்புகள் மற்றும சேவைகளை சந்தைப்படுத்துதல் மற்றும் விநியோகிப்பதில் நிபுணத்துவம் பெற்றது.

இந்த நிறுவனம் 2008 ஆம் ஆண்டு டி–லிங்க் கார்ப்பரேஷனின் துணை நிறுவனமாக இணைக்கப்பட்டது. இது நெட்வொர்க்கிங் தீர்வுகளில் உலகளாவிய தலைவராகும், மும்பையை தலைமையிடமாகக் கொண்ட நிறுவனமாகும், மேலும் கோவாவில் உற்பத்தி வசதியையும் கொண்டுள்ளது.

டி–லிங்க் (இந்தியா) லிமிடெட் என்பது தைவானின் டி–லிங்க் கார்ப்பரேஷனின் ஒரு பகுதியாகும், இது இந்தியாவின் மிகப்பெரிய நெட்வொர்க்கிங் நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனம் இந்தியா மற்றும் சார்க் பிராந்தியத்தில் நெட்வொர்க்கிங் தயாரிப்புகளின் சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளது.

டி–லிங்க் (இந்தியா) லிமிடெட், நாடு தழுவிய அணுகல், வலுவான தயாரிப்பு போர்ட்ஃபோலியோ மற்றும் இந்தியாவில் சிறந்த சேவைகளைக் கொண்ட ஒரு முக்கிய சந்தை வீரராகும். உயர்தர, திறமையான மற்றும் நம்பகமான நெட்வொர்க்கிங் தயாரிப்புகள், தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் நிறுவனம் உறுதியாக உள்ளது. டி–லிங்க் இந்தியா 13 கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது, இது இந்தியா முழுவதும் அதிநவீன சேவை ஆதரவு உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

D–Link என்பது அதன் வலுவான பிராண்ட் நினைவுகூருதல், பாரம்பரியம், விரிவான தயாரிப்பு போர்ட்ஃபோலியோ, பரந்த நாடு தழுவிய விநியோக நெட்வொர்க் மற்றும் இணையற்ற ஆதரவு உள்கட்டமைப்பு ஆகியவற்றின் காரணமாக, வீட்டு மற்றும் SMB/SME நெட்வொர்க்கிங் இடத்தில் கணக்கிடப்பட வேண்டிய ஒரு பெயராகும். D–Link என்பது ஒரு முழுமையான தீர்வு வழங்குநராகும், இது நெட்வொர்க் உள்கட்டமைப்பின் அனைத்து பகுதிகளிலும் நீட்டிக்கும் தயாரிப்புகளை வழங்குகிறது. D–Link இன் வளமான மற்றும் வலுவான தயாரிப்பு போர்ட்ஃபோலியோ, வணிகங்களுக்கு அவர்களின் நெட்வொர்க் உள்கட்டமைப்பின் ஒவ்வொரு மட்டத்திலும் மதிப்பைச் சேர்க்கிறது.

இன்று, டி–லிங்க், அதிக இணைக்கப்பட்ட, புத்திசாலித்தனமான மற்றும் வசதியான உலகத்திற்கான அடித்தளத்தை அமைத்து வருகிறது. நிறுவனத்தின் வைஃபை ரவுட்டர்கள், ஐபி கேமராக்கள், ஸ்மார்ட் ஹோம் சாதனங்கள் மற்றும் பிற தயாரிப்புகள், நுகர்வோர் தங்கள் வீடுகளின் வசதியுடன் சிறந்த ஆன்லைன் அனுபவங்களையும், அதிக மன அமைதியையும் அனுபவிக்க உதவுகின்றன.

TeamF1என்பது இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள உட்பொதிக்கப்பட்ட சாதனங்களுக்கான நெட்வொர்க்கிங் மற்றும் பாதுகாப்பு மென்பொருளை வழங்கும் நிறுவனமாகும். 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட TeamF1, ஜூன் 2014 இல் முழுமையாகச் சொந்தமான, ஆனால் சுயாதீனமாக இயக்கப்படும் துணை நிறுவனமாக D–Link ஆல் கையகப்படுத்தப்பட்டது. TeamF1 எங்கள் முக்கிய தளமான TFOS® – 'TeamF1 இயக்க முறைமை' ஐப் பயன்படுத்தி நெட்வொர்க் பாதுகாப்பு, Wi–Fi மேலாண்மை,

CPE டர்ன்–கீ மற்றும் கூறு மென்பொருளை வழங்குகிறது.

டி–லிங்க் (இந்தியா) லிமிடெட்டில், நிறுவனம் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் நாடு முழுவதும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்கிறது. நிறுவனம் பல வழிகள் மூலம் சந்தைக்குச் செல்கிறது, மேலும் அவர்களின் விநியோகம் மற்றும் சேவை வலையமைப்பு ஒவ்வொரு பிரிவிலிருந்தும் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முழுமையாக தயாராக உள்ளது. தற்போது டி–லிங்க் இந்தியாவின் வலுவான விநியோக கட்டமைப்பில் 4 தேசிய விநியோகஸ்தர்கள், 80+ வணிக விநியோகஸ்தர்கள் மற்றும் 15000+ க்கும் மேற்பட்ட மறுவிற்பனையாளர்கள்/சில்லறை விற்பனையாளர்கள்/மின்னணு சில்லறை விற்பனையாளர்கள் போன்றோர் உள்ளனர், அவர்கள் நாட்டின் தொலைதூரப் பகுதியிலும் கூட தங்கள் தயாரிப்புகள் கிடைப்பதை உறுதி செய்கிறார்கள்.

இது உட்பொதிக்கப்பட்ட அமைப்புகள், நெறிமுறை நிரலாக்கம், டிஜிட்டல் சிக்னல் செயலாக்க அடிப்படையிலான அமைப்புகள் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் பணியாற்றி வருகிறது. நிறுவனம் IP தொலைபேசிகள், IPBX, வயர்லெஸ் LAN மற்றும் நெட்வொர்க் பாதுகாப்பு ஆகியவற்றின் மேம்பாடு உள்ளிட்ட திட்டங்களில் கவனம் செலுத்துகிறது. D–Link (இந்தியா) லிமிடெட் என்பது 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருப்பைக் கொண்ட பன்னாட்டு D–Link கார்ப்பரேஷனின் ஒரு பகுதியாகும்.

நிறுவனம் இரண்டு முதன்மை வணிகப் பிரிவுகளில் செயல்படுகிறது. நுகர்வோர் தீர்வுகள் மற்றும் நிறுவன தீர்வுகள்.

தயாரிப்புகள் மற்றும் சேவைகள்:–

நுகர்வோர் தயாரிப்புகள்:

தடையற்ற இணைய அணுகல் மற்றும் கண்காணிப்புக்கான மின்வழங்கிகள், ரவுட்டர்கள், வைஃபை நீட்டிப்புகள், ஸ்மார்ட் ஹோம் இணைப்பு தீர்வுகள், சிசிடிவி கேபிள்கள் மற்றும் மின்சாரம்.

நிறுவன தயாரிப்புகள்:–

டிஜிட்டல் மாற்றத்திற்கு உள்ளாகும் வணிகங்களுக்கான உயர் செயல்திறன் கொண்ட சுவிட்சுகள், உறைகள் மற்றும் நெட்வொர்க்கிங் தீர்வுகள்.

சேவைகள்:–

இந்தியா முழுவதும் 34 கூட்டாளர் சேவை வழங்குநர்கள் மூலம் விரிவான ஆதரவு, தொழில்நுட்ப உதவி மற்றும் பராமரிப்புசேவை. இந்திய சந்தையில் SOHO/SMB நெட்வொர்க்கிங் துறையில் வலுவான பிராண்ட் ரீகால், 1,500+ நகரங்களில் இருப்புடன் வலுவான விநியோக வலையமைப்பு, அதிக வருவாய் விகிதங்கள் மற்றும் உறுதியான சந்தைப் பங்குடன் ஆரோக்கியமான நிதி. தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக D-Link கார்ப்பரேஷனின் (தைவான்) தாய் நிறுவனத்தின் ஆதரவைக் கொண்ட நிறுவனம்.

அடிப்படைக் கண்ணோட்டம்:–

நிறுவனத்தின் ஒருங்கிணைந்த EPS 29.58 (2025–06 அன்று முடிவடைந்த பன்னிரண்டு மாதங்கள் பின்தங்கிய நிலையில்), ஒருங்கிணைந்த PE விகிதம் 16.26 தொழில்துறை PE உடன் ஒப்பிடும்போது 14.85, முக மதிப்பு ரூபாய் 2.

நிறுவனம் கிட்டத்தட்ட கடன் இல்லாதது.

நிறுவனம் கடந்த 5 ஆண்டுகளில் 25.2% CAGR நல்ல லாப வளர்ச்சியை வழங்கியுள்ளது

சமீபத்திய கிடைக்கக்கூடிய தரவுகளின்படி விளம்பரதாரர்கள் 51.02% வைத்திருக்கிறார்கள்.

## நிறுவன அடிப்படைகள்:–

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>16.26 | EPS - TTM (₹)<br>29.58 |
| MCap (₹ Cr.)<br>1,704.23 | Sectoral MCap Rank<br>2 |
| PB Ratio (x)<br>3.60 | Div Yield (%)<br>4.16 |
| Face Value (₹)<br>2.00 | Beta<br>1.46 |
| VWAP (₹)<br>482.66 | 52W H/L (₹)<br>685.00 / 349.45 |

**D-Link (India) Share Price Insights** VIEW ALL

- Zero Debt Burden
- Quarterly Topline Performance
- Employee & Interest Expense
- D-Link (India) Share Price Update

**D-Link (India) Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↑0.06% |
| 1 Week | ↓-3.36% |
| 1 Month | ↑2.26% |
| 3 Months | ↓-10.83% |
| 1 Year | ↓-27.15% |
| 3 Years | ↑180.49% |
| 5 Years | ↑374.7% |

## நிறுவன நிதி நிலை:–

Income (P&L) Balance Sheet Cash Flow Ratios CONSOLIDATED

INSIGHTS

**Quarterly Topline Performance**
Company witnessed QoQ revenue decline of 5.47%, which is lowest in the last 3 years. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**
Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 3.16% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

| QUARTERLY ANNUAL | JUN 2025 | MAR 2025 | DEC 2024 | SEP 2024 | JUN 2024 |
|---|---|---|---|---|---|
| Total Income | 355.62 | 376.18 | 325.43 | 341.26 | 351.26 |
| Total Income Growth (%) | -5.47 | 12.15 | -1.74 | -2.82 | 3.85 |
| Total Expenses | 322.56 | 339.01 | 299.72 | 305.76 | 319.31 |
| Total Expenses Growth (%) | -4.85 | 13.11 | -1.97 | -4.24 | 4.87 |
| EBIT | 33.06 | 37.17 | 35.71 | 35.61 | 31.95 |
| EBIT Growth (%) | -11.04 | 4.07 | 0.30 | 11.45 | -5.34 |
| Profit after Tax (PAT) | 24.38 | 27.43 | 26.50 | 26.72 | 23.61 |
| PAT Growth (%) | -11.14 | 3.51 | -0.81 | 13.18 | -5.92 |
| EBIT Margin (%) | 9.30 | 9.88 | 10.65 | 10.43 | 9.10 |
| Net Profit Margin (%) | 6.85 | 7.29 | 7.90 | 7.83 | 6.72 |
| Basic EPS (₹) | 6.87 | 7.73 | 7.47 | 7.53 | 6.65 |

All figures in Rs Cr, unless mentioned otherwise

View Details

காலாண்டு டாப்லைன் செயல்திறன் நிறுவனத்தின் QoQ வருவாய் 5.47% சரிவைக் கண்டது, இது கடந்த 3 ஆண்டுகளில் மிகக் குறைவு. (ஆதாரம்: ஒருங்கிணைந்த நிதியியல்அரிக்கை)

**மார்ச் 31, 2025 உடன் முடிவடைந்த ஆண்டில், பணியாளர் மற்றும் வட்டி செலவு நிறுவனம் அதன் இயக்க வருவாயில் 1% க்கும் குறைவாகவே வட்டி செலவுகளுக்காகவும், 3.16% ஊழியர் செலவுக்காகவும் செலவிட்டுள்ளது. (ஆதாரம்: ஒருங்கிணைந்த நிதிஅரிக்கை)**

Income (P&L) | **Balance Sheet** | Cash Flow | Ratios — CONSOLIDATED

INSIGHTS
**Zero Debt Burden**
Company has no debt since last 5 years. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 748.05 | 695.14 | 629.30 | 512.56 | 431.20 |
| Total Assets Growth (%) | 7.61 | 10.46 | 22.78 | 18.87 | 14.37 |
| Total Liabilities | 272.56 | 259.96 | 250.90 | 209.94 | 164.90 |
| Total Liabilities Growth (%) | 4.85 | 3.61 | 19.51 | 27.31 | 19.05 |
| Total Equity | 475.49 | 435.18 | 378.40 | 302.62 | 266.30 |
| Total Equity Growth (%) | 9.26 | 15.01 | 25.04 | 13.64 | 11.65 |
| Current Ratio (x) | 2.59 | 2.52 | 2.38 | 2.27 | 2.40 |
| Total Debt to Equity (x) | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| Contingent Liabilities | 64.25 | 65.20 | 65.20 | 31.89 | 31.87 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise*

View Details »

**கடந்த 5 ஆண்டுகளாக ஜீரோ டெப்ட் பர்டன் நிறுவனத்திற்கு எந்த கடனும் இல்லை. (ஆதாரம்: ஒருங்கிணைந்த நிதிஅரிக்கை)**

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — CONSOLIDATED

INSIGHTS
**Decrease in Cash from Investing**
Company has used Rs 5.93 cr for investing activities which is an YoY decrease of 91.12%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 89.96 | 120.54 | 5.89 | 33.49 | 74.60 |
| Net Cash used in Investing Activities | -5.93 | -66.73 | -5.03 | -18.53 | -58.23 |
| Net Cash flow from Financing Activities | -70.76 | -41.40 | -15.45 | -11.24 | -8.36 |
| Net Cash Flow | 13.28 | 12.41 | -14.59 | 3.72 | 8.01 |
| Closing Cash & Cash Equivalent | 31.52 | 18.24 | 5.83 | 20.42 | 16.70 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | 72.79 | 212.74 | -71.43 | 22.29 | 92.16 |
| Total Debt/ CFO (x) | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise*

View Details »

**முதலீட்டு நிறுவனத்திடமிருந்து ரொக்கத்தில் ஏற்பட்ட குறைவு ரூ.5.93 கோடியை முதலீட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 91.12% குறைவு. (ஆதாரம்: ஒருங்கிணைந்த நிதியியல் அரிக்கை)**

Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — CONSOLIDATED

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 21.92 | 21.28 | 22.82 | 13.97 | 11.77 |
| Return on Capital Employed (%) | 29.43 | 28.60 | 30.41 | 18.88 | 16.06 |
| Return on Assets (%) | 13.93 | 13.32 | 13.72 | 8.25 | 7.27 |
| Interest Coverage Ratio (x) | 197.14 | 132.52 | 120.13 | 127.55 | 50.07 |
| Asset Turnover Ratio (x) | 1.92 | 1.87 | 2.07 | 1.93 | 168.49 |
| Price to Earnings (x) | 14.08 | 10.49 | 9.61 | 11.72 | 11.90 |
| Price to Book (x) | 3.08 | 2.23 | 2.19 | 1.64 | 1.40 |
| EV/EBITDA (x) | 9.40 | 6.91 | 6.49 | 7.07 | 6.38 |
| EBITDA Margin (%) | 10.64 | 10.64 | 10.34 | 6.81 | 6.70 |

## தொழில்நுட்ப விளக்கப்படம்:-




## சக நிறுவன ஒப்பீடு:-





D-Link (India) Stock Performance | **Ratio Performance** | SEE ALL PARAMETERS

| NAME | | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|---|
| D-Link (India) | | 16.28 | 3.60 | 21.92 | 13.93 | 14.77 | 10.14 |
| Redington | × | 12.85 | 2.28 | 18.40 | 5.81 | 16.47 | 2.05 |
| Panache Digilife | × | 79.90 | 8.90 | 10.45 | 6.06 | 9.83 | 8.82 |
| HCL Infosystems | × | -22.83 | -1.69 | 0.00 | -4.87 | -23.10 | -108.78 |
| Bartronics | × | 346.79 | 15.94 | 6.18 | 5.36 | -14.59 | 0.85 |
| Nelco Ltd | × | 301.21 | 15.94 | 7.45 | 3.31 | 5.34 | 8.19 |

## பங்குதாரர் முறை:–


QOQ Change | Total Shareholdings




*Showing D-Link (India) Shareholding as on Jun 2025*

| CATEGORY | JUN 2025 | MAR 2025 | DEC 2024 | SEP 2024 |
|---|---|---|---|---|
| Promoters | 51.02 | 51.02 | 51.02 | 51.02 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 1.21 | 1.20 | 0.84 | 0.50 |
| DII | 0.01 | 0.00 | 0.12 | 0.72 |
| Mutual Funds | 0.00 | 0.00 | 0.00 | 0.21 |
| Others | 47.76 | 47.77 | 48.01 | 47.76 |

QOQ Change | Total Shareholdings




*Showing Shareholding as on Jun 2025*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 1,81,14,663 | 51.02 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 4,30,433 | 1.21 % | ↑0.01 |
| DII | 2,360 | 0.01 % | ↑0.01 |
| MF | 73,710 | 0.21 % | - |
| Others | 1,69,57,394 | 47.76 % | ↓-0.01 |

## கட்டுரையாளரின் தனிப்பட்ட பார்வையில்:–

நிறுவனம் உலகளாவிய நெட்வொர்க்கிங் உபகரண வழங்குநரான டி–லிங்க் நிறுவனத்தின் ஒரு பகுதியாகும், எனவே வலுவான பின்னணி & நற்பெயர், நிறுவனத்தின் அடிப்படைகள் & நிதி ஒட்டுமொத்தமாக நன்றாக உள்ளது. எனது தனிப்பட்ட ஆய்வின்படி, நடுத்தர கால (9 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை) முதல் நீண்ட கால (24 முதல் 36 மாதங்கள் வரை) முதலீட்டிற்கு எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நல்லது. நடுத்தர காலத்தில் ரூபாய் 700+ ஐக் காணலாம். நீண்ட காலத்திற்கு எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் ரூபாய் 950+ ஐ எதிர்பார்கலாம்.

# இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில் குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள் :

## க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **Torrent Power Ltd.**
Entry 1270 to 1280. Add more on down till 1000.
Target 1400 and 1500

2, **Hindustan Zinc Ltd.**
Entry 440 to 450. Add more on down till 340.
Target 500 and 5503.

3, **Gujarat Pipavav Port Ltd.**
Entry 150 to 155. Add more on down till 120.
Target 180 and 210.

4, **ITC Ltd.**
Entry 400 to 410. Add more on down till 360.
Target 440 and 480

5, **Southern Petrochemical Industries Corp Ltd.**
Entry 90 to 95. Add more on down till 70.
Target 110 and 120

6, **Bharat Dynamics Ltd.**
Entry 1560 to 1580. Add more on down till 1300.
Target 1800 and 2000

7, **Cemindia Projects Ltd.**
Entry 800 to 810. Add more on down till 700.
Target 900 and 1000

8, **Central Depository Services (India) Ltd.**
Entry 1520 to 1540. Add more on down till 1200.
Target 1650 and 1800

9, **Bharat Heavy Electricals Ltd.**
Entry 220 to 230. Add more on down till 180.
Target 260 and 280

10, **Bajaj Healthcare Ltd.**
Entry 470 to 480.
Add more on down till 400. Target 550 and 640

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

# NAGARATHAAR KAPITAL

(Will learn and earn together in wealth creating Journey)

## Webinar Course.

I. Stock Market Course (Beginners).
Basics, Fundamentals, Technical (Introduction).

II. Stock Market Course (Advanced).
Technical, Strategies.

## Why One Wealth Course?

Learn from Qualified and Experienced Expert Panelists.
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor.
Assist to Develops investment strategies to achieving financial goals
Got Learn about Different Market.
Personalized financial advice.

## Who can join?

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.


**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
For October 2025 Class will be on 19/10/2025

**Webinar Timings** India Time: 17:30Hrs - 18.30Hrs / 21.00 - 22.00Hrs, On Week days & 17.00Hrs - 18.00Hrs / 20.00 - 21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# விழாக்களின் நாயகன் - சுக்கிரன்
## ஓர் ஜோதிட பார்வை

-ஜோதிடர் எல்லி
9894176494




நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வணக்கம்.

இந்த 2025 வருட தீபாவளி சிறப்பிதழில் நவக்கிரக நாயகர்கள்களில் பெருமை வாய்ந்த சுக்கிரனை பற்றியும், மகாலட்சுமி யுடன் சுக்கிரனின் தொடர்பு பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



ஜோதிடத்தில் ஒவ்வொரு கிரகமும் தத்தமது காரகத்துவங்களை பொறுத்து பலன்களைத் தரும், சுப கிரகங்களான குரு, சுக்கிரன், புதன் மற்றும் வளர்பிறை சந்திரன் போன்றவை பொதுவாக நல்ல பலன்களைத் தருவதால், விழாக்களுக்கும் மகிழ்ச்சியான நிகழ்வுகளுக்கும் இவை உகந்த கிரகங்களாகக் கருதப்படுகின்றன.

இதில் சுக்கிரன் கூடுதலாக பல சிறப்பான பலன்களை அளிக்கும் கிரகம் ஆகும். ஜோதிடத்தில் சுக்கிரன் மகாலக்ஷ்மி யை குறிப்பதால் சுப காரியங்களை நடத்தும் யோகம் அவருக்கே உரியதாகிறது.



திருமணம், கேளிக்கைகள், சுப நிகழ்ச்சிகள், விருந்து வைபவங்கள், கொண்டாட்டங்கள், திருவிழாக்கள் இவை அனைத்தும் சுக்கிரன் சார்ந்த காரகத்துவங்களை உள்ளடக்கியது ஆகும்.





ஆடம்பரமான வீடு, சொகுசான வாகனங்கள் அறுசுவை உணவுகள், அழகியபட்டாடைகள் இவையெல்லாம் சுக்கிர பகவானின் ஆளுகைக்கு உட்பட்டது எனலாம்.

சுக்கிரன் செல்வம், மகிழ்ச்சி, மற்றும் இன்பம் ஆகியவற்றின் காரணியாகக் கருதப்படுகிறார். எனவே, அழகு மற்றும் மகிழ்ச்சியைக் கொண்டாடும் எந்தவொரு விழாவிற்கும் சுக்கிரன் தொடர்பான பலன்களை எதிர்பார்க்கலாம்.

சகல சுபிட்சைகளையும் வழங்குபவர் சுக்கிரன் அதனை அனுபவிக்கும் உ மகாயோகத்தையும் ஜாதகருக்கு அளிக்கிறார்.

ஜாதகத்தில் களத்திர காரகனான இவரது சுபபலத்தை கொண்டே வாழ்க்கைத் துணை , மற்றும் இல்லற சுகத்தை அறிய முடிகிறது.

வசந்த விழா,விருந்து கொண்டாட்ட விழா, கேளிக்கைகளுக்கான விழா, மகிழ்ச்சிக்காக கொண்டாடப்படும் விழாக்கள் என அனைத்தையும் நடத்துபவர் சுக்கிரனே ஆவார்.

மகாலட்சுமி போன்ற மனைவி எல்லோருக்கும் வாய்த்து விடாது அதற்கும் யோகம் வேண்டும். மகாலட்சுமி யோகம் கொண்டவர்களுக்கு செல்வ வளம் குவியும். திருப்பதி ஏழுமலையானுக்கே மகாலட்சுமி மனைவியாக வந்த பின்னர்தான் செல்வம் பெருகியதாக சொல்லப்படுகிறது. வெள்ளிக்கிழமைக்கு அதிபதியான சுக்கிரன் யாருக்கெல்லாம் சுப பலத்துடன் அமர்ந்து இருக்கிறதோ அவர்கள் யோகம் பெற்றவர்கள் ஆகிறார்கள்.

புராணங்களில் சுக்கிரன்

மகரிஷிக்கு மகனாய் அவதரித்தவர்தான் சுக்கிரன். அதனால் மகாலட்சுமிக்கு பார்கவி என்ற பெயர் உள்ளது போல சுக்கிரனுக்கு பார்கவன் என்றும் ஒரு பெயருண்டு.



ஒரே தாய் தந்தையருக்கு இவர்கள் இருவரும் அவதரித்ததால் சுக்கிரன் ஸ்ரீ மகாலட்சுமியின் உடன் பிறந்த சகோதரன் ஆகிறான். சுக்கிரனின் அதிகாரம் உள்ள வெள்ளிக்கிழமையில் ஸ்ரீ மகாலட்சுமியை வழிபாடு செய்தால் அவள் சகல நலன்களும் அருள்வாள்.

வெள்ளிக்கிழமையில் வெள்ளி விளக்கில் பசு நெய் ஊற்றி வெண்மையான பஞ்சுத்திரி போட்டு விளக்கு ஏற்றுவதன் மூலம் மகாலட்சுமி நம் வீட்டில் வாசம் செய்கிறார். சுக்கிரனுடைய அருட்பார்வை குடிசையில் உள்ளவர்களையும் குபேரனாக்கும் சக்தி படைத்தது.

மகாலெட்சுமி யின் மறுஉருவே சுக்கிர பகவான் ஆவார்.லெட்சுமி என்ற சொல்லுக்கு நிகரில்லாத அழகி என்று பெயர். அழகு பிரதிபலிக்கும் இடங்களிலெல்லாம் திருமகள் காட்சி தருகிறாள். இத்தகைய லட்சுமியை விஷ்ணு தன் இதயத்தில் இடமளித்து ஸ்ரீனிவாசன் எனப் பெயர் பெறுகிறார்.



பாற்கடலில் இருந்து தோன்றிய மகாலட்சுமி தரித்திரத்தை போக்கி தனத்தை அளிக்கும் சக்தி பெற்றவள். இல்லாமை என்ற சொல்லை இல்லாமல் செய்பவள். ஒருவருக்கு பொன் பொருள் ஆடை ஆபரணங்களை தருவதும் மகாலட்சுமியே.

சுக்கிரனை வணங்கி வாழ்வில் இன்பம்,மதிப்பு, அதிர்ஷ்டம் பெற விரும்புகிறவர்கள் சுக்கிர காயத்ரி மந்திரம் ஓதி, திருவரங்கநாதரை வழிபட்டு வாருங்கள்.

வெண்தாமரை மலரை அர்ச்சித்து, மொச்சை தானம் செய்தல் நன்மை பயக்கும்.

ரிசப, துலாம் ராசிக்காரர்கள் மற்றும் சுக்கிர தசா நடப்பவர்கள் மேற்கண்ட பரிகாரம் செய்வது சிறப்பு.

ஜோதிடத்தில் பிரபு என்று அழைக்கப்படும் சுக்கிரன் மகாவிஷ்ணு வின் மார்பில் விளங்கும் மகாலெட்சுமி கடாட்சம் பெற்றவர் என்பதை வாசகர்கள் அறிந்து கொண்டு இருப்பீர்கள் மீண்டும் மற்றொரு தலைப்பில் சந்திப்போம்.

வருகிற தீப ஒளித் திருநாள் அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கட்டும்.

# மாண்புமிகு மனைவி

பெண்மை நித்தம் மண்ணின் இமயம்
இல்லறம் கண்டிடத் துணையாய் மாறும்
குடும்பத்தைக் காப்பதில் சிகரமாய் உயரும்
ஏற்றிடும் விளக்கில் வசந்தங்கள் மலரும்



மனைவி நித்தம் தாயின் வடிவம்
கைகள் கோர்த்தே நடந்திட முயலும்
இறுதி வரையில் இணைந்திடும் சொந்தம்
பிரித்திட இயலா அற்புதப் பந்தம்

துன்பம் என்றிடத் தோள்களைத் தருவாள்
சக்தியின் வடிவாய்க் காட்சிகள் அளிப்பாள்
முகத்தினில் சோகத்தைப் பார்த்தே அறிவாள்
பக்குவம் கொண்டே விடைதனைப் பகர்வாள்

இரவினில் கொடுப்பாள் ஆனந்த விருந்து
மானுடர்க்கு அதுவே ஆரோக்கிய மருந்து
அன்னையைப் போலே காட்டுவாள் நேசம்
பக்கம் சென்றிடச் சுகந்தத்தின் வாசம்

பிள்ளைகள் பிறந்திடப் பொறுப்பினில் சிறப்பாள்
விடியலில் எழுந்தே பணியினைத் தொடர்வாள்
பம்பரம் போன்றே சுழன்றிட முனைவாள்
தன்னலம் கருதாத் தகைமையில் மிளிர்வாள்

மாண்புமிகு மங்கைச் சொல்லிடப் பொருந்தும்
இறைவன் தந்த வரமாய் அமையும்
இதயத்தில் தாங்கிப் போற்றிடல் கடமை
தந்திட வேண்டும் அவளுக்கும் உரிமை



கவிச்சுடர்
தஞ்சை பழ வள்ளியப்பன்
மதுரை



webneel.com

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com